

# திருக்கோயில்



மே
2000

விலை
ரூபாய் ஐந்து



திருவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில் மகா சம்ப்ரோட்சண வைபவம் 10–2–2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருப்பணிக் குழுத் தலைவர் திருமிகு பி.ஆர். இராமசுப்பிரமணிய ராஜா அவர்களும், திருக்கோயில் செயல் அலுவலர் திரு. ப. நெல்லையப்பன் மற்றும் திருப்பணிக்குழு உறுப்பினர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.




# திருக்கோயில்

திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2031 | விக்ரம ஆண்டு வைகாசி | மணி |
|---|---|---|---|
| 42 | மே 2000 | | 5 |





சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப

ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

*திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில்
பிரம்மோற்சவத் திருத்தேரோட்ட விழா*

## பொருளடக்கம்


திருவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயிலில் நடைபெற்ற நாலாயிரத் திவ்வியப் பிரபந்த ஆய்வரங்கத்தில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள் ஆற்றிய பாசுர விளக்கத்தின் சுருக்கம்

கம்பரின் இராமாவதாரம்
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

ஸ்ரீசாரதா புஜங்கம்
- ஸ்ரீபாரதி தீர்த்ததாசன்

இமாலயச் செலவு
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

செயற்கரிய செய்வர் பெரியர்
- சித்தாந்தவித்தகர் த. ஆறுமுகம்

வைகாசி மாத மகிமை - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்
- பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியன்

எட்டாத விருப்பங்கள் ஈடேற வேண்டும்
- கவிஞர் செ.பொ. சொக்கலிங்கம்

சுவாமி முதலியாண்டான் - திருமதி கோமதிராகவன்

என்னை உனக்கே தந்தேன் முருகா!
- திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.

வினாவும் விடையும் - பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

வருமுன் காப்போம்
- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., ஆணையாளர் அவர்கள்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

## திருவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில் மகாசம்ப்ரோட்சணத்தை முன்னிட்டு 06.02.2000ல் நிகழ்த்தப் பெற்ற நாலாயிரத் திவ்விய பிரபந்த ஆய்வரங்கத்தில்

## இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர்

## திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்கள்

### ஆற்றிய பாசுர விளக்கவுரையின் சுருக்கம்.

**(திருவில்லிப்புத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக் கோயிலில் நாலாயிரத் திவ்வியப்பிரபந்த ஆய்வரங்கம் 6.2.2000 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதில் நம் ஆணையாளர் அவர்கள் ஆற்றிய ஆய்வுரைச் சுருக் கம் வாசகர்கள் படித்துப் பயன்பெற இங்கு மகிழ் வுடன் வெளியிடப்பெறுகின்றது.)**

திருவில்லிப்புத்தூரின் திருவிளக்காம் ஆண்டா ளும் அவருடைய திருத்தகப்பனார் பெரியாழ்வாரும் அன்றாடம் நடந்துசென்ற அந்தத் திருப்பாதையிலே மேடையமைத்து அந்த மேடையில் நின்று ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியில் ஒரு பாசுரத்தைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பளித்த அறங்காவலர் குழுவினருக் கும், திருக்கோயிலின் செயல்அலுவலருக்கும் என் னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கி றேன். அந்தப் பாசுரம்:

'உள்ளே உருகி நைவேனை
உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த்தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன்று இல்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில்
எறிந்துஎன் அழலைத் தீர்வேனே''

இப்பாசுரத்தில் முதற்கண் 'உள்ளே உருகி நைவேனை'' என்று ஆண்டாள் சொல்லும்பொழுது, ஆண்டாளுடைய உள்ளம் ஆனந்தத்தாலே முதற்கண் உருகுகின்றது. பின் கவலையினாலேயும் உள்ளம் உருகு கின்றது.

எப்படி ஆனந்தத்தாலே அவர் உள்ளம் உருகு கின்றது? அன்றாடம் தம் திருத்தகப்பனாருடன் சேர்ந்து சென்டு மாலை, கிளி மாலை, குழல் மாலை, உலா மாலை இப்படி பல்வேறு வகையான மாலைகளைத் தொடுத்து, தாமும் அணிந்து, அதை வடபெருங்கோயிலா னுக்கு அணிவித்து அதைப் பார்த்து மகிழ்ந்து, அதனாலே பெறுகின்ற ஆனந்தத்தாலே ஆண்டாளுடைய உள்ளம், வெயிலைக் கண்ட பனிக்கட்டி போன்றும், வெப்பத்தைக் கண்டு உருகுகின்ற வெண்ணெயைப் போன்றும் உருகு கின்றது.

பின்பு, அவருடைய உள்ளம் வருத்தத்தினாலே உருகுகின்றது. ஏன் அவர்க்கு வருத்தம் ஏற்படுகின்றது? மானுடரைப்போன்றது அல்ல ஆண்டாளுடைய உள்ளம். சஷ்டியப்தப் பூர்த்தி முடிந்தவுடனே சதாபிஷே கம் கொண்டாட வேண்டுமென்று விழைவது மனித உள்ளம். வாழ்த்துவோரும் அப்படித்தான் வாழ்த்து வார்கள். வாழ்த்தப்படுபவரும் அப்படித்தான் ஆசைப் படுவார்கள்.

ஆனால் ஆண்டாளுடைய உள்ளம் அப்படிப் பட்ட உள்ளம் அல்ல. இந்த நிலவுலக வாழ்க்கை அவ ளுக்கு வெறுக்கின்றது. அப்பொழுது ஆண்டாளுக்குப் பதினைந்தே வயதுதான்; பெரியாழ்வாருக்கும், அவருக் கும் கிட்டத்தட்ட ஐம்பது வயது வித்தியாசமென்று சொல்லப்படுகின்றது.

ஆண்டாள் முதலில் 30 பாடல்கள் 'திருப்பாவை'' யாகப் பாடுகின்றார். அதற்குப் பலனில்லாமல் போய் விடுகின்றது. 'நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்று அவர் ஏகாரத்திலே சொல்லுகின்றார். அவன் வெறும் ஆயன் அல்ல. நாராயணனே; அவனே பரம் பொருள்; அந்த நாராயணனைத் தவிர வேறு முழுமுதற் கடவுள் இல்லை என்று ஆண்டாள் ஏகாரத்திலே உறுதி படச் சொல்லுகின்றார். நமக்கே பறை தருவான் என்று வீடுபேறு தருவான் என்று ஆண்டாள் சொல்லுகின்றார். நோன்பின் போது எதைச் செய்வோம் எதை செய்ய மாட்டோம் என்று ஆண்டாள் திருப்பாவை முப்பது பாடல்களில் சொல்லி நோன்பை முடிக்கின்றார். அப்படி யும் பயனில்லாமல் போய்விடுகின்றது.

திருப்பாவையோடு வீடுபேறு கிடைத்துவிடும் என்று எண்ணிய ஆண்டாள் திருவாயிலிருந்து நாச்சியார் திருமொழியையும் அவருடைய திருவாயினால் பாடிக் கேட்கவேண்டும் என்ற காரணத்தினாலே, நாராயணன் அவளைக் காக்க வைத்தான் என்று தெரிகிறது. அதனா லும் ஆண்டாளுடைய உள்ளம் கவலையினாலே உருகு கின்றது.

அனுவரதமும், சதாகாலமும் வடபெருங்கோயி லுடையானையே, அந்த ரங்கமன்னாரையே, பெரிய பெருமாளையே ஆண்டாள் நினைத்துக் கொண்டிருந்த காரணத்தினாலே இன்னும் திருவருள்கிட்டவில்லையே

என்ற ஏக்கத்தினால் ஆண்டாள் உள்ளம் உருகுகின்றது. எப்படி ஒரு கயிறோ, துணியோ அடிக்கடி பயன்படுத்தினால் நைந்து போகுமோ, பயன்படுத்தப்படும் பொருள்களுக்குத் தேய்மானம் ஏற்படுமோ அதைப் போன்று ஆண்டாளுடைய உள்ளம் நைந்துபோகின்றது. அத்தகைய ஆண்டாளின் நைந்துபோன உள்ளத்தை, துடித்துக்கொண்டிருக்கும் உள்ளத்தை நாராயணன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை; அவன் சட்டையே செய்யவில்லை. அதனால் இப்பாசுரத்தில் 'உளளோ இலளோ என்னாத'' என்று குறிப்பிடுகின்றாள் ஆண்டாள். அதாவது ஆண்டாள் எனும் ஒருத்தி இருக்கிறாளா இல்லையா? இல்லை செத்துப் போய் விட்டாளா என்று அவன் நினைக்கவில்லையே என்று வருத்தப்பட்டுச் சொல்லுகின்றாள்.

நாம் நடைமுறையிலேயே பார்க்கிறோம்; வீட்டைவிட்டு வெளியே வராத பெரியவர்களை நாம்தான் சென்று பார்ப்போம். நீண்ட இடைவெளிக்குப் பின்னாலே நாம் சென்று பார்த்தால் 'இப்பத்தான் உனக்கு நேரம் கிடைத்ததா? நான் இருக்கிறேனா இல்லை, செத்துப்போய்விட்டேனா என்று கூட, வந்து பார்க்கவில்லையே!'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். அப்படித்தான் ஆண்டாளும் நினைக்கின்றாள். நாச்சியார் திருமொழியிலும் கிட்டத்தட்ட 130 பாசுரங்கள் ஆண்டாள் பாடிவிட்டாள். அவ்வாறு பாடியபிறகும் பலன் இல்லாமல் இருக்கின்றதாலே 'உளளோ இலளோ என்னாத'' என்று பாடுகின்றாள் ஆண்டாள்.

அடுத்துக் 'கொள்ளை கொள்ளி குறும்பனை''. என்கின்றார். குறும்பு என்பது அருவருக்கத்தக்கது. பஸ்ஸைக் கொளுத்துவது, பயணிகளைக் கொளுத்துவது எல்லாம் அருவருக்கத்தக்க குறும்புகள். ஆனால் இந்தக் கண்ணன்-கிருஷ்ணன் செய்கின்ற குறும்புகள் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுகின்றதாம். என்ன அப்படி அவர் குறும்புகள் செய்கின்றார்? பொதுவாக 'வெண்ணெயும் பாலும் திருடித் தின்பான், வெறும் சட்டியானால் அதைப் போட்டுடைப்பான்; பின்னலைப் பின்னாலே நின்று இழுப்பான், இனிக்கவே ஒன்று தா என்று கெஞ்சி நிற்பான்'' என்று கண்ணனுடைய குறும்புகளைச் சொல்லுவார்கள். ஆண்டாளுடைய திருத்தகப்பனார் பெரியாழ்வார் இந்தக் கண்ணன் செய்கின்ற குறும்புகளை எல்லாம் பட்டியலிட்டே காட்டுகின்றார். இன்னும் பலர் குறிப்பாக லீலாசுகர், 'ஸ்ரீகிருஷ்ணகர்ணாமிர்தத்'திலே கண்ணன் செய்கின்ற குறும்புகளைப் பலப்பட எடுத்துச் சொல்லியிருப்பதை நீங்கள் படித்து மகிழலாம்.

கண்ணனின் குறும்புகளைக் காட்டும்வகையில் 'கொள்ளை கொள்ளிக் குறும்பனை'' என்று சொல்லிவிட்டுக் 'கோவர்த்தனனை'' என்கின்றார். இறைவனுடைய - குறிப்பாக நாராயணனுடைய பன்னிரண்டு திருநாமங்கள் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. இந்தத் திருநாமங்களைப் போலவே இந்தக் 'கோவர்த்தனன்'' என்ற திருநாமமும் சிறப்பாகக் கூறப்பட்டு வருகின்றது.

'கோவர்த்தனன்'' என்ற திருநாமம் அவருக்கு எப்படி வந்தது? கோவர்த்தன கிரியை அவர் குடையாகப் பிடித்ததனாலேயே 'கோவர்த்தனன்'' என்ற திருநாமம் வந்தது. இந்திரன் அடாத மழையை ஏவி, விடாமல் ஒரு வாரம் ஆயர்பாடியிலே மழைபெய்யச் செய்தான், அதிலும் கல்மழையைப் பெய்யச் செய்தான்.

ஆயர்குல மக்கள் எல்லாம், ஆயர்குலம் அழிந்துவிடுமோ, ஆயர்பாடி அழிந்துவிடுமோ என்று வருந்தி, இந்த ஆயர்குல அணிவிளக்கிடம் சென்று முறையிடுகிறார்கள். 'நீங்கள் தான் காப்பாற்றவேண்டும்'' என்று பிரார்த்திக்கிறார்கள். அப்பொழுது தான் தன்னுடைய ஒரு விரலினாலே கோவர்த்தன கிரியைத் தூக்கிப்பிடித்து அடாத மழையைத் தடுத்து, ஆயர்பாடியும், ஆநிரையும், ஆயர்குல மக்களும் அழியாமல் காக்கின்றார். அதனால் தான் அவருக்குக் 'கோவர்த்தனன்'' என்ற திருநாமம் வந்தது.

அந்தக் கோவர்த்தனனைக் கண்டேனேயானால் எனக் கூறவரும் ஆண்டாள் 'கோவர்த்தனனைக் கண்டக்கால்'' என்று குறிப்பிடுகிறார். அவர் மட்டும் சிக்கினால் தான் என்ன செய்வேன் என்பதைக் கூறுகின்றார்.

பெண்களுக்கு மார்பகங்கள் அமைந்திருப்பது அழகுக்காக அல்லது அழகுபடுத்துவதற்காகவோ அல்லது குழந்தைகளை வளர்ப்பதற்காகவோ அமையப் பெற்றது என்று ஆண்டாள் நினைக்கவில்லை. அதனால் ஆண்டாள் மானிடனைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை. 'மானிடருக்கென்று பேச்சுப்படின் வாழகில்லேன்'' என்று சொல்லுகின்றார் ஆண்டாள். அதனாலே ''கொள்ளும் பயன் ஒன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும் அள்ளிப் பறித்திட்டு'' என்று கூறுகின்றார். சாதாரணமாக ஒரு செடியை வெட்டினால் மீண்டும் அது பழையபடி வளர்ந்துவிடும். அது போன்று இது வளர்ந்து விடக்கூடாது என்று திரும்ப வளர முடியாதபடிக்கு வேரோடு நான் அள்ளிப் பறித்திடுவேன் என்கின்றார். ''அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பிலே எறிந்து என்னுடைய அழலைத் தீர்வேனே'' என்கின்றார். இதிலே மேலேழுந்தவாறு நாம் பார்த்தால் தன்னுடைய உடல் உறுப்பு ஒன்றைக் கிள்ளி, நாராயணன் உடல்மேல் போட்டு, தன்னுடைய துயரத்தை / விரக தாபத்தைத் தீர்த்துக் கொள்வேன்'' என ஆண்டாள் கூறியிருப்பதாகத் தோன்றுகின்றது.

இன்னொரு கோணத்தில் நாம் பார்த்தால் இதிலே மிகச் சிறந்த ஆன்மீகத் தததுவம் ஒன்று அடங்கியிருப்பதை நாம் உணரலாம்.

ஆதிசங்கரர் சிவானந்த லகரியிலே ஒரு கேள்வியைக் கேட்கின்றார். ''பக்தி கிம்ன கரோதி'' என்று. ''பக்தி கிம்ன கரோதி'' என்றால் பக்தி எதைத்தான் செய்யாது

என்பது பொருள். இந்தக் கேள்வியிலேயே பக்தி எதையும் - எல்லாவற்றையும் செய்யும் என்ற பதிலும் அடங்கியிருக்கின்றது. அந்தப் பக்தி என்ன என்பதை ஆதிசங்கரர் விளக்குகின்றார். அங்கோல மரத்தினுடைய விதைகள் எப்படி அங்கோல மரத்தின் வேரைச் சார்ந்துவிடுமோ, அதுபோன்று நம்முடைய நெஞ்சம் இறைவனுடைய நெஞ்சத்தைச் சேர்ந்து ஒட்டிக்கொள்வதுதான் பக்தி. நாம் ஒருமனப்பட்ட உணர்வோடு இறைவனின் உள்ளத்துடன் இணைவதுதான் பக்தி என்று தெளிவுபடுத்துகின்றார் ஆதிசங்கரர். அவ்வாறே ஆண்டாளும் தம் எண்ணத்தை நாராயணன் எண்ணத்துடன் இணைக்கும் பக்தியையே இப்பாசுரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். அந்த அளவிற்கு ஆண்டாள் நாராயணன் மேல் பக்தி செலுத்தியிருக்கின்றார். அதைப் பக்தி என்றும் சொல்லலாம், பிரபத்தி என்றும் சொல்லலாம்.

இந்தப் பாசுரத்திலே அவர் அறுசுவையை வெளிப்படுத்துகின்றார். அவருடைய வீரத்தை வெளிப்படுத்துகின்றார். தீரத்தை வெளிப்படுத்துகின்றார். வேகத்தை வெளிப்படுத்துகின்றார். விவேகத்தை வெளிப்படுத்துகின்றார். கோபத்தை வெளிப்படுத்துகின்றார். தாபத்தை வெளிப்படுத்துகின்றார். பக்தியை வெளிப்படுத்துகின்றார். பிரபத்தியை வெளிப்படுத்துகின்றார். தன்னுடைய எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்துகின்றார். ஏமாற்றத்தையும் வெளிப்படுத்துகின்றார். இப்படி அறுசுவைபட ஆண்டாள் தன்னுடைய உள்ளக்கிடக்கை அத்துணையையும் இந்தப் பாசுரத்திலே வெளிப்படுத்துகின்றார். எதற்காக அவர் வெளிப்படுத்துகின்றார்?

இந்த நிலவுலகிலே இந்த உடலுள் இருப்பது அவருக்குத் துன்பமாக இருக்கின்றது. அவருக்கு வீடுபேறு கிடைப்பது நிச்சயமாக இருந்தாலும்கூட காத்திருப்பதற்கு அவர் தயாராக இல்லை. அதாவது பக்தி யோகம் என்பது மிகக்கடுமையான ஒன்று. பக்தியோகம் என்பது கடனைத் தவணைமுறையில் செலுத்தலாம் என்பது போன்றது. அந்த ஒரு சலுகைதான் பக்தியோகத்தில் உண்டு. ஆனால் பிரபத்திஎன்பது கடனே வேண்டாம்; தள்ளுபடி செய்துவிடுகிறேன் என்பதைப் போன்றது. அப்படி பிரபத்தி செய்தும்கூட ஆண்டாளுக்கு உடனே வீடுபேறு கிடைக்கமாட்டேன் என்கிறது.

அந்த அளவிற்கு ஆண்டாள் நாராயணன் மேல் பக்திசெலுத்தி இருக்கின்றார். அவருடைய பக்தியைப் பக்தி என்றும் சொல்லாம். பிரபத்தி என்றும் சொல்லாம். அதிலேயும் ஆர்த்தரூப பிரபத்தி, திருப்தரூப பிரபத்தி என்று பிரபத்தியை வகைப்படுத்துகிறார்கள். வீடுபேறு உடனே கிடைப்பது அல்லது இன்னும் கொஞ்சம் கழித்துக் கிடைப்பது என்றவகையில் ஆர்த்தரூப பிரபத்தி என்றும், திருப்தரூப பிரபத்தி என்றும் வகைப்படுத்தியுள்ளார்கள். எப்படியும் வீடுபேறு அடியவர்களுக்கு உண்டு. சிலருக்கு உடனே கிடைத்துவிடும். சிலருக்குக் கொஞ்சம் கழித்துக் கிடைக்கும்.

நல்ல செல்வந்தர் ஆவது, ஆண்டாள் திருக்கோயில் மகாசம்ப்ரோட்சணத்தைப் பார்ப்பது - இப்படி பல்வேறு சிறப்புகள், வாய்ப்புகள் பெற்று இந்த உலகிலே இன்னும் சிறிதுநாள் மகிழ்ந்த பிறகும் வீடுபேறு பெறலாம். அப்படியெல்லாம் வசதிகள், வாய்ப்புகள் வேண்டாம், வீடுபேறு உடனே வேண்டும் என்று இறைவனைப் பிரபத்திசெய்வது ஆர்த்தரூப பிரபத்தி ஆகும். ஆண்டாளும் அவ்வாறே வீடுபேற்றினை உடனே பெற எண்ணுகிறார். ஆர்த்தரூப பிரபத்தியை அவர் மேற்கொள்கின்றார்.

இந்தப் பாசுரத்திலே ஆண்டாள் நிறைவாக என்னசேதி சொல்லுகிறார் என்று பார்த்தால் ஐம்புல ஒடுக்கம் என்பதைச் சொல்லுகின்றார். இறைவழிபாட்டிற்கு - இறைசிந்தனைக்கு உடல்உறுப்புகள் தடையாக இருக்குமேயானால் அதை அறுத்தெறிவேன் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

மதுரகவிகள் நம்மாழ்வாரிடம் 'செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் அது எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'' என்று கேட்டபொழுது, நம்மாழ்வார், 'அது அத்தை தின்று அங்கே கிடக்கும்'' என்று சொன்னார். மதுரகவிகள் தமிழில்தான் கேள்வியைக் கேட்டார். நம்மாழ்வாரும் தமிழில்தான் விடையைக் கூறினார். யோசித்து யோசித்துப் பார்த்தாலும் பொருள் எளிதாக விளங்கவில்லை.

அதாவது - இந்தப் பஞ்சபூதங்களினாலே - மாயையினாலே ஆக்கப்பட்ட இந்த உடலிலே ஜீவாத்மா என்னும் சிற்றுயிர் பிறந்தால் அது என்ன செய்யும்? அது எப்படி இருக்கும்? என்ற கேள்விக்கு இந்த உடலினாலே வரும் இன்பதுன்பங்களை நுகர்ந்துகொண்டு, உயிர் அந்தஉடலைவிட்டு வெளியேறாமல் அந்த உடலில் கிடக்கும் என்று கூறுகின்றார் நம்மாழ்வார்.

அதுபோன்று ஆண்டாளால் இருக்கமுடியவில்லை. இந்தத் தூல உடலினாலே இடையூறு ஏற்படும் என்று கருதி அவர் தன் இன்பஉறுப்புகளை அறுத்தெறிவேன் என்று கூறி இப்பாசுரத்திலே தம்முடைய வேகத்தை வெளிப்படுத்திப் பெரிய பெருமாளுடன் விரைவிலே தான் ஐக்கியமாய்விட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலே அவர் புலம்புவதாகவும், வருத்தப் படுவதாகவும், கவலைப்படுவதாகவும் வருகின்றது.

இப்படிப்பட்ட ஒரு அரிய பாசுரத்தை நாமும் தினமும் படித்துக் கொண்டிருந்தால் நம் உள்ளமும் உருகி, நாமும் ஆண்டாள் பெற்றதைப் போன்ற ஒரு நற்கதியை அடைவதற்கும் வாய்ப்பாகும் என்று கூறிக்கொண்டு, இந்த அரிய வாய்ப்பினை நல்கிய அனைவருக்கும், பொறுமையாக இருந்துகேட்ட அனைவருக்கும் நன்றிகூறி இத்துடன் என்உரையை நிறைவு செய்து கொள்கிறேன். வணக்கம். ★

# கம்பரின் இராமாவதாரம்

## 2. அயோத்யா காண்டம்

– கம்பன் கவிநயமணி V. தியாகராஜன்

### 5. யாதினும் இனிய நண்ப!

தனது பிரிவைத் தாங்கமுடியாது தன்கூடவே காடுபுகுந்த மக்களைக்கண்டு இரக்கப்பட்ட இராமபிரான் தன்னைக்காட்டில் விட்டுவருவதற்காக, தேர்செலுத்தி வந்த மந்திரியான சுமந்திரனை நோக்கி 'இரவோடிரவாக, இம்மக்கள் தூங்கும்போது தேரைச்செலுத்திக்கொண்டு அயோத்திசென்றுவிடு. நானும்சீதையும் இலக்குவனும் காட்டிற்குள் போய்விடுகிறோம். பொழுதுவிடிந்ததும் தேர்ச்சுவட்டைப் பார்த்து இராமபிரான் அயோத்தி திரும்பிவிட்டார் எனமக்கள் நினைத்து அயோத்தி திரும்பிவிடுவர்'' என்றார்.

சுமந்திரன் 'தேவியும் இளையவனும் பின்தொடர இராமனைக் காட்டில் விட்டுவந்தேன் என தசரதனிடம் எவ்வாறு கூறுவேன்? அவர்களைத் திருப்பி அழைத்து வந்தேன் எனக்கூறாது காட்டில் விட்டுவந்தேன் எனக்கூற என்நெஞ்சு இரும்பால் ஆனதா? நகரத்துமக்கள் நான் இராமபிரானைத்திரும்ப அழைத்துவருவேன் எனக்கூறி தசரதருக்கு ஆறுதல்கூற, அதை நம்பி இராமபிரானை எதிர்பார்த்திருக்கும் தசரதரிடம் இராமபிரான் வர வில்லை எனக்கொடியவார்த்தைகூறி அவரைக் கொல் லப்போகிறேனா? வேள்விசெய்து மக்களைப்பெற்ற தசரதரிடம் மக்களைக் காட்டில் விட்டுவந்தேன் என எவ்வாறு கூறுவேன்? கைகேயி வரங்கேட்டதால் தசரதர் மூர்ச்சையானார். நான் கூறும் செய்திகேட்டவுடன் உயிரை விட்டுவிடுவாரே! கைகேயியைக் காட்டிலும் கொடியவ னாகிவிட்டேனே''

அங்கிமேல் வேள்வி செய்து அரிதில் பெற்ற நின்
சிங்கவேறு அகன்றது என்று உணர்த்தச் செல்கேனோ?
எங்கள் கோமகற்கு இனி என்னில் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால்?

எனப்பலவாறு கூறி சுமந்திரன் திரும்பிச்செல்ல மறுக்கிறான்.

'சுமந்திரரே! வருந்தாதீர்கள். நீர் அயோத்தி சென்றேயாகவேணும். பதினான்கு வருடங்களில் திரும்பி வந்து தங்கள் திருவடிகளை வணங்குவேன் என என் தந்தையிடம் கூறவேணும். 'என்தாய்மார்கள் மூவருக்கும் என் வணக்கம் தெரிவிக்கவேண்டும்'' என்று இராம பிரான் சுமந்திரனை வற்புறுத்தினார். 'என் மாமன் மாமி யருக்கு என் அன்புகலந்த வணக்கத்தைக் கூறுவதுடன், எனது அரண்மனையில் உள்ள கிளி, புறா முதலான வற்றை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி என் தங்கை யருக்குக் கூறுங்கள்'' என்றாள் சீதாபிராட்டி.

கோபத்தின் உருவமாக நின்ற இளையவன் 'இராமபிரானுக்கு அளித்த அரசை, தன் சொல்தவறி, ஒரு பெண்ணுக்கு (கைகேயிக்கு) அளித்த தசரதரை அரச ரென்று அழைப்பதா? ஐயா, உமது அருமைமைந்தனான இராமபிரான் நாடாளவேண்டிய நல்லதினத்தில் காடு புகுந்து, அறுசுவை உண்டி உண்டுவாழவேண்டியவர், காட்டிலுள்ள காய்கனி கிழங்குகளை உண்டு, பட்டு மெத்தையில் புரட்டவேண்டிய தன்உடலை பாழும் தரையில் புரட்டிக்கொண்டு வாழ்கிறார். இதையறிந்து உயிர்விடாத கடின மனமுடைய தன்மைகண்டு இளைய வன் பிரமித்து ஆச்சரியப்படுகிறான்! எனக் கூறும்'' எனச் சீறினார். தம்பியைத் தடுத்துச்சமாதானப்படுத்தி, சுமந்திரனை அயோத்திக்கு அனுப்பிய இராமபிரான் சீதையின் கற்பும், தமது நற்குணமும் தம்பியும், தம் கருணையும், நல்உணர்வும், வாய்மையும் தமது வில் லுமே துணையாகக் கொண்டு காடுபுகுந்தார்.

தையல்தன் கற்பும் தன் தகவும்: தம்பியும்
மையறு கருணையும்: உணர்வும்: வாய்மையும்
செய்யகை வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே.

தன்னைத்துன்புறுத்தும் அதர்மத்தை வேரோடு அழிக்க, அரக்கர்களைக்கொல்ல, தான் செய்த புண்ணியத்தின் விளைவாக இராமலட்சுமணர் வந்துவிட்டனர் என்று தருமதேவதை மகிழ்ச்சிகொண்டு எட்டிப் பார்த்தனளோ என எண்ணுமாறு தருமத்தின் முகம்போன்று முழுச் சந்திரன் தோன்றியது.

★★★

இது இவ்வாறாக, சுமந்திரன் அயோத்தியடைந்த தும், அவர்மூலம் செய்திகளை அறிந்த வசிட்டர். கவலையடைந்தார். **''இரதம் வந்தது''** என மக்கள் பேசிக்கொள்வதைக் கேட்டு சிறிதுமயக்கம் தெளிந்த தசரதன் **''வரதன் வந்துவிட்டானா?''** என்றார். இல்லை

யென உரைத்துத் தசரதனின் துயரை அதிகமாக்கவிரும்பாத வசிட்டர் அங்கிருந்து போய்விட்டார்.அந்நிலையில் தசரதர் 'இராமன் எங்கே'' எனச்சுமந்திரனைக் கேட்க சுமந்திரன் 'தம்பியும் மனைவியும் பின்தொடர இராமன் காட்டுக்குள் போய்விட்டார்'' என்று கூறும்போதே தசரதனின் உயிர்நீங்கிவிடுகிறது. கௌசலை 'ஓ'' என்று அலறினாள். மக்களாலேயே தங்களுக்கு மரணமா? தேவர்களுக்கு உபகாரம்செய்த தாங்கள் தேவருலகம் சென்றுவிட்டீர்களா?'' என்றெல்லாம் அலறினாள். ஒருகிணறு அதில்சிறிது நீர்உள்ளது. அந்தநீரில் ஒருமீன். மேலே மேகம் வந்துள்ளது. மழைவந்து மேலும் நீர்நிரம்பும். அந்நீரில் உயிர்வாழலாம் எனமீன் எண்ணும்போது, பெருங்காற்றடிக்க, மேகம் ஓடிவிடுகிறது. தரையிலிருந்த தண்ணீரும் வற்றிவிட, மீன்வெறும் தரையில் எப்படி உயிர் நீங்குமுன் துள்ளித்துடிக்குமோ அம்மாதிரி கௌசலை துடித்தாள். அயோத்தி என்னும் கிணற்றில், வற்றக்கூடிய தசரதன் எனும் சிறுஅளவுநீரில் மீன் வசிக்கிறது. மேலே இராமன் எனும் மேகத்தைக்கண்டு மகிழ்கிறது. விதியான பெருங்காற்றுவீச இராமன் எனும் மேகம் நீங்க, தசரதன் எனும் தண்ணீர்வற்ற, கரையில் விடப்பட்ட மீன்மாதிரி கௌசலை துடிக்கிறாள்.

வானீர் சுண்டி மண்ணற வற்றி மறுகுற்ற
மீனே என்ன மெய்தடுமாறி விழுகின்றாள்

என இச்சோக நாடகத்தைக் காட்டுகிறது கம்பனின் மந்திரக்கவிதை. மக்கள் நால்வரும் பக்கத்தில் இல்லை. அவர்கள் வந்து கருமங்களை நிறைவேற்றவேண்டும் என்பதால் சக்கரவர்த்தியின் உடலை எண்ணைநிறைந்த பெரும்பாத்திரத்தில் இட்டுப் பாதுகாக்கின்றனர்.

இந்நிலையில் பொழுது விடிகிறது. 'சூரியவம்சத்தின் அரசர் மறைந்துவிட்டார். இராமலட்சுமணர் காடு சென்றுவிட்டனர். பரதசத்ருக்கனர் பாட்டன்வீடு சென்றுள்ளனர். சூரியனான எனதுகுலம் அரசனில்லாது தவிக்கக்கூடாது. அவர் திரும்பிவருமளவும் நானே உலகைக் காப்பாற்றுகிறேன்'' எனக்கூறுவதுபோல் சூரிய உதயமாயிற்று. **'வானே புக்கான் அரும்புதல்வன்: மக்களகன்றார் வருமளவும் யானே காப்பேன் இவ்வுலகை என்பான்போல் விரிகதிரோன்''** இது இவ்வாறாகக்காட்டிலிருந்த மக்கள் எழுந்து இராமபிரானைக் காணாது, அயோத்திநோக்கித் தேரின் சுவடுசென்றதைக்கண்டு இராமபிரான் அயோத்திதிரும்பிவிட்டான் என எண்ணி, அயோத்திக்குத் திரும்பிவந்து மன்னவன் மறைந்ததும், இராமன் காடுபுகுந்ததும் கேட்டு என்ன செய்வதெனத் தெரியாமல் திகைத்தனர்.

★★★

கங்கை நதிக்கரையில் சீதாராமர், லட்சுமணருடன் மாலைமஞ்சள்வெயில் நேரத்தில் நடந்து செல்லும் காட்சியைக் காட்டுகிறார் கம்பர். கதோபனிடம் என்னும் நூல் **'சூரியனும், நட்சத்திரங்களும் ஒளிகுறைந்துவிடுகின்றன என்றால் அக்னி எவ்வாறு ஒளிகாட்டும்? உலகத்திற்கே ஒளிகொடுக்கும் பரம்பொருள் - யாவற்றையும் ஒளியுடன் விளங்கச்செய்யும் பரம்பொருளின் எதிரில் மற்றஒளிகள் மங்கிவிடும்''** என்கிறது. இராமபிரானான பெருமானின் ஒளியில் சூரியனின் ஒளிமங்கிவிடுகிறது. இல்லாத ஒன்றைப்பேசினால் அதை உலகத்தவர் பொய்என்பர். இடையே இல்லாத சீதையை **பொய்யோ எனும் இடையாள்** என்கிறார் கவிஞர். அண்ணனுக்குச் சேவைசெய்வதில் என்றும் இளைக்காதவன் இலக்குவன் என்பதால் இலக்குவனை **இளையான்** என்கிறார். இராமனது கரியதிருமேனியை **மையோ!** என்றார். மைபளபளக்காது. மேலும் ஒருசிமிழில்மை அடங்கும். இராமபிரானின் கரியதிருமேனியை **கருமுகில் கொழுந்தெழில்காட்டும் சோதி - கருஞாயிறு** என்றெல்லாம் கம்பர் கூறுகிறார். மேலும் இராமபிரான் எனும் தெய்வம் எதிலும் அடங்காத பெரிய தன்மையுடையது. எனவே **மரகதமோ?** என்றார். மரகதம் ஒருகல். கடினமானது. மேலும் மரகதம் என்றஇரத்தினம் பணக்காரரிடம் மாத்திரம் இருக்கும். இராமபிரான் உடலும் உள்ளமும் மிருதுவானவன். ஏழைப்பங்காளன். எனவே இதுவும் பொருந்தவில்லை. அதனால் **மறிகடலோ?** என்றார். கடல் கசப்பானது. இராமபிரான் காணவும் நினைக்கவும் இனிமையானவர். **மனத்திற்கினியான்** என்றே அழைப்பார். அதுமட்டுமல்ல. கடலின் ஆழத்தைக் காணநாம் அதைநோக்கிச் செல்லவேணும். கடல் நம்மை நோக்கி வரக்கூடாது. இராமபிரானான கருணைக் கடலை நோக்கி நாமும் செல்லலாம். அழைத்தால் தன் கருணையால் அது நம்மை நோக்கிவரும். எனவே கடல் என்பதும் சரியாகஇல்லை. எனவே **மழைமுகிலோ?** என்றார். இராமபிரான் எனும் கருணைமேகம் நம்மைநோக்கி வரக்கூடியதுதான். ஆனால் உலகத்திலுள்ள மேகத்தோடு இராமபிரானை உவமையிடமுடியாது என்கிறார். **வேண்டுங்கால் நீ பெய்யாய்! வேண்டாதபோது பெய்வாய்** என மேகத்தை ஒருவர் இகழ்ந்தார். தக்காருக்குத் தக்க நேரத்தில் தருமமழைபொழியும் மேகவண்ணனான இராமபிரானை மேகத்துடன் ஒப்பிடமுடியவில்லை. எனவே ஆனந்த அனுபூதியில், திருப்பாணாழ்வார் திருவரங்கப்பெருமானின் அழகைக்கண்டு, **நீலமேனி, ஐயோ, நிறைகொண்டது என் நெஞ்சினையே!** என்று களிப்படைந்ததுபோல், மை அழியும், மரகதம் அழியும், மறிகடல் மழைமுகில்யாவும் அழியும். என் இராமபிரானின் அழகு அழியாஅழகு என்றார். என்றுமுள நித்தியப் பொருள் இராமபிரான் என்பது குறிப்பு. மறிகடல் ஊழியில் அழியும். மழைமுகில் உலகமன்னர் தருமந்தவறுங் காலை அழியும். இராமபிரான் ஊழியிலும் அழியாத தருமவுருவும் உடையவர் என்றார்.

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியில்
மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோ! மரகதமோ! மறிகடலோ! மழைமுகிலோ!
ஐயோ! இவன் வடிவென்பதோர் அழியா
அழகுடையான்

பாடிப்பாடிபரவசபட்டுக் காதலாகிக் கண்ணீர் விட்டு ஆனந்தப்படவேண்டிய **மிகமிகமிக அழகிய பாடல்களில் இதுவும்ஒன்று! தமிழன்னையின் தவம் இத்தகைய இன்பமயமான பாடலைப்பாடுமாறு கம்ப னைத் தூண்டிவிட்டது போலும்!**

கங்கைக்கரையில் வசிக்கும் மாமுனிவர்கள் எதிர் கொண்டழைத்து மகிழ்ந்தனர். சொல்லான மாலை சூட்டி, அன்பான அமுதையூட்டி வழியில் வந்த களைப்பை நீக்கி, 'கங்கையில் நீராடி தெய்வீகக்கடன்களை முடித்துக்கொண்டு காய்கனி கிழங்குகளான உணவை அருந்தவேண்டும்'' என்றனர்.

காயும் கானிற் கிழங்கும் கனிகளும்
தூயதேடிக் கொணர்ந்தனம்! தோன்றல் நீ
ஆயகங்கை அரும்புனலாடி முத்
தீயும் ஓம்பி செய்யமுது என்றனர்.

இராமபிரான் கங்கையில் நீராடினார். இப்பெருமான் வாமனாவதாரம் எடுத்து ஈரடியால் மூவுலகத்தையளக்க பேருருவம் கொள்ள, அத்தகைய திருவுருவத்தின் திரு வடிகளை பிரமன் தன்கமண்டல நீர் கொண்டுகழுவ. அதுவே கங்கையாக மாறியது என்பர். திருவடியை அலம்பிய நீரே புனித கங்கையாகிவிட்டதென்றால் ஐயனான திருமேனி பூராவும் அலம்பிய நீர் எத்துணை தூயதோ! இந்நீரில் நீராடினால் உலகத்தில் யாவருக்கும் நரகம் என்பதில்லாமல் முத்தியேகிடைக்குமே! என்கிறார் கம்பர்.

செய்ய தாமரைத்தாள் பண்டு தீண்டலால்
வெய்யபாதகம் தீர்த்துவிள ங்கினாள்!
ஐயன்மேனி யெலாம் அளைந்தால் இனி
வையம் மாநரகத்திடை வைகுமோ?

★★★

அவ்வாறு நீராடி, உணவருந்தி இராமபிரான் ஓய்வெடுத் துக்கொண்ட காலத்தில் தன்னை யாரோதேடிவந்து அழைத்தமாதிரி இராமபிரான் உணர்ச்சியடைந்து இலக்குவனை ஏவ, பர்ணசாலையின் வாயிலில் வந்த இலக்குவன், தோள்வலிமிகுந்த, கோபமில்லாதபோதும் சிவந்தகண்களையுடைவனான ஒருமுரடனான வேட னைக் கண்டுவினவவே, வந்த வேடுவர் தலைவனான குகன் இலக்குவனை இராமபிரான் என எண்ணி **'தேவா! உன்கழல் சேவிக்கவந்தேன். நாவாய் வேட்டுவன்** (ஓடம் செலுத்தும் வேடன்) அடியேன் குகன்'' என, இராமபிரானிடம் திரும்பிவந்த இலக்குவன் 'உள்ளம் தூயவன்' தாயினும் நல்லானாகிய குகன் என்பவன் வந்துள்ளான்'' எனக்கூற, குகப்பெருமான் எதிரில் இராமபிரான் வர, அவரைக்கண்டு திருவடிகளில் வணங் கிய குகனைக்கண்ட இராமபிரான் 'இப்படி அமர்க!'' என உட்காரச் சொல்ல 'பெருமானே! தேனில் ஊறப்போடப் பட்டமீன் கொண்டுவந்துள்ளேன். இந்தக்காணிக்கையை ஏற்றுக்கொள்க'' என இறைஞ்சினான். வெளியே சென்று வந்த மகனை 'சரி காரியம் முடித்துக்கொண்டு வந்தாயா? பசியாயிருப்பாய். நீராடி உணவருந்து'' என்பார் தந்தை. கங்கையில் நீராடி உணவருந்து என்ற முனிவரின் அன்பு **தந்தையின் அன்பு,** 'நீராடும்வரை பசிதாங்கமாட்டாய். உடனே உணவருந்து'' எனத்தேனும் மீனும் தந்தது **தாயன்பு.** தேன்மேலிடமாகிய மலையில்கிடைக்கும். மீன் ஆழமான தண்ணீரில் கிடைக்கும். எனவே விண் முதல் மண்வரைஉள்ள எல்லாவற்றின் அடையாள மாக **தேன்-மீன்** தந்தேன் என்றான் குகப்பெருமான். அவற்றை இராமர் ஏற்றுக்கொண்டதாகக் கூறுகிறார் கம்பர். (**உண்டதாகக்கூறவில்ல** என்பது தேற்றம்) 'அன்பினால் தந்த இது பவித்ரமானது(பரிசுத்தமானது) ஏற்றுக்கொண் டேன். நீசென்று நாளை காலைவா'' என்றார் இராம பிரான். குகன் 'உன்னை இப்படிக்கண்ட கண்களைத் திருப்பி எடுக்கமுடியவில்லை. **உன்னை இங்ஙனம் பார்த்த கண்களை ஈர்கிலாக் கள்வனேன்** (முடிசூடி விளங்கவேண்டிய உன்னை சடாமகுடத் துடன் காணும் என் கண்களைத் தோண்டி எரியமுடியாத பாவி என நொந்து பேசியதாகவும் கூறுவர்) இங்கேயே! இருக்கவந் துள்ளேன்'' எனக்கூற, அவனது அன்பு கண்டுமகிழ்ந்து அவனை **'யாதினும் இனியநண்ப!** என அழைத்து 'எங்களோடு இங்கேயே இரு'' எனக்கூறி யருளினார். (தொடரும்)

## அறம் செய்து வாழ்க!

அறஞ்செய்து வாழ்வதே வாழ்க்கை

- அறநெறிச்சாரம்

# ஸ்ரீசாரதா புஜங்கம்.

— ஸ்ரீ பாரதி தீர்த்த தாஸன்

*(சிருங்கேரி பூஜ்யஸ்ரீ சந்திரசேகரபாரதி மகாசன்னிதானம் அவர்கள் அருளிச் செய்தது.)*

(முன் தொடர்ச்சி)

சிவபெருமானை வணங்குவதற்காக விபூதி, ருத்ராட்சங்கள் அணியும்போது சிவபெருமானுடைய திருவுருவம் மாதிரி மாறிவிடுகிறோம். இதை சாரூபம் என்பர். இறைவனைப் பற்றிப்பாடிப்புகழ அவர் அருகாமையிலிருப்பதாக எண்ணுகிறோம். இதை சாமீபம் என்பர். அவரை நினைந்து உருகிவணங்கி மெய்மறந்த நிலையிலிருப்பதால் அவருடைய உலகத்தை அடைந்த உணர்ச்சி ஏற்படுகிறது. இதை சாலோகம் என்பர். மூன்றையும் அடைவது முத்தியடைந்தமாதிரி எனவே மூன்றும் அடைந்தநிலையை சாயுஜ்யம் என்பர் சிவானந்த லகிரியிலே ஸ்ரீ ஆதிசங்கரர்.

தன்னையடைந்தவரைத் தன்மயமாக்குவர் சிவ பெருமான். ஆனால் **பதஞ்சலி**முனிவர் நடராஜப் பெருமானையடைந்து அவர் **பதம் சலியாது** ஆடுவது கண்டார் என்பார் குமரகுருபரசுவாமிகள். அம்முறை யில் 'தாயே! சாரதாதேவி! உடற்பிணியும் உலகப்பிறப்பான பிணியும் நீங்க உன்னை அடியார்கள் அடைவர். வறுமை நீங்கஉனையடைவர். ஆனால் நீ அவர்களை சூலியாக்கி விடுகிறாய். (அப்பர்சுவாமிகளை சூலைநோய்பற்றியது நினைவுக்குவருகிறது) ஆனால் நீ சூலத்தையுடைய சிவ பெருமானைப்போல அவர்களை விபூதி, ருட்ராட்சம் தரித்தவர்களாக மாற்றுகிறாய். வறுமையில் எளியஉடை உடுத்தியமாதிரி தோலாடைபூண்டுவரும் சிவபெருமானைப்போல் ஆக்கிவிடுகிறாய். உன்னையடைபவர் உன்நாயகனான சிவபெருமானை நினைவுறுத்தும் தோற்றத்தை உண்டாக்கி அவர்துன்பங்களை நீக்குகிறாய் என விநோதமாகப்பேசுகிறார்.

மாபிணி சாந்தியுற வறுமை விலகுறவே
மாந்தருனை வேண்டி யுனை வழிபடுவர்: அவரே
மாறுவார் சூலியாய்த் தோலை அணிவாராய்
மற்றிதென் முறையுனைச் சரணமடைவார்பால் 16

ஆசையே துன்பங்களுக்கெல்லாம் காரணம். ஆசைநீங்கசிவபூசை செய்யுமாறு கூறினர் பெரியோர். **ஆசையறாய் பாசம்விடாய் ஆன சிவபூசை பண்ணாய்** என்றனர். ஆசை, மோகம், கோபம் முதலானவற்றை விட்டஞானிகளை தரிசிக்கயாவரும் ஆசை கொள்ளுவர். ஞானசம்பந்தப் பெருமான் மதுரைவந்த போது அவருடைய பெருமையைக் காதால் கேட்டு மகிழ்ந்தவர்கள் கண்ணால் கண்டு அமுதமருந்தியது போல் மகிழ்ந்தனர் என்பார் சேக்கிழார். அப்பர் பெருமானது தவவேடத்தை, சேக்கிழார்பெருமான்

தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும்:
தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருசிந்தையும்: நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும்:
பதிகச்செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர்வீதியுள்ளே.


எனப்படம் பிடித்துக்காட்டுகிறார். 'சிவபெருமானை வணங்காத சிந்தை இரும்பு. அடியார்களுக்கு ஏவல்செய்யாத உடல் மரம். மெய் வாய் கண்மூக்கு செவி முதலான வற்றைச் சிவனடியார்பால் செலுத்தாத உடல் வெறும் பொம்மை. நல்லோர்கள் எதைக்கண்டாலும் தெய்வீக மாகவே காண்பர். பரவை நாச்சியாரின் அழகைக்கண்ட சுந்தரமூர்த்தி நாயனார், 'இது என்ன? **அற்புதமோ சிவனருளோ யாதோ என்று அதிசயித்தார்.** 'அம்மையும் நாயனாரைக்கண்டு **'முன்னமே வந்து எதிர்தோன்றும் முருகனோ?''** எனத் தெய்வீகமாகவே கண்டார்.

இதையே ஸ்ரீ ஆசாரியாள் 'அம்மையே! ஆசை நீங்க உன்னையடைந்த மக்களைக் கண்டவுடன் உலகம் பூராவும் அவர்களைக்கண்டு ஆசைப்படுகிறது. இது என்ன ஆச்சரியம் என்கிறார்.

மோகம் அற்றிடுமாறு உனைச் சரண்புக்கோர்
முகம் நோக்கில் சர்வலோகமுமோர் கணத்தே
மோகமுற்றிடுதே வியப்பென்று முந்நீர்
மூழ்குதென்உள்ளமால் அம்மை சாரதையே. 17

இதற்கு வேறு உதாரணமே தேவையில்லை. முற்றும் துறந்த ஸ்ரீஸ்ருங்கேரி மகா சன்னிதானம் அவர்களை தரிசிக்கச்சென்றால் அங்கேயே அவர்கள் சன்னதியிலே இருந்துவிடவேண்டுமென்ற எண்ணம் உண்டாகிற தன்றோ!

சீதாபிராட்டி பிறந்ததால் அழகும் அழகுபெற்றது என்பார் கம்பர். மனிதர் அலங்காரம் செய்து கொண்டால் அழகான தோற்றம் உண்டாகிறது. ஆனால் சீதாபிராட்டி அலங்காரம் செய்துகொண்டபோது ஆபரணங்களான திரை அவளது அழகை மறைத்து விட்டன. **உமிழ்சுடர்க்கலன்கள் நங்கை உருவினை**



மறைப்பது என்றார் கம்பர். ஸ்ரீ சாரதாபுஜங்கம் தமிழாக்கம் செய்துள்ள சக்திதாஸன் என்ற கோவை. திரு.I.G. ராமநாதனார் கற்பகாம்பிகை என்ற நூலில். 'கோடியசூரியப் பிரகாசமுடைய உன் ஒளியில் உலகமே ஒளிபெறுகிறது. உன் சோதியுருவை எவரால் விவரிக்க முடியும்.''

மின்கோடி சூரியர்கள் வெகுகோடிமிகச் சொலிக்கும்
பொன்மேரு போலுருகிப் பொலிகின்ற பேரொளியாய்
உன்மேனிச் செந்நிறத்தில் உலகங்கள் குடைந்திடுமே
நின் சோதிச் சொரூபத்தை நிகழ்த்திடவும்
சொல்லுண்டோ?

என்கிறார்.

அம்மையை வணங்கக்கூடியவர்கட்கு சரசுவதியைக்காட்டிலும் அறிவும் இலக்குமிகடாட்சத்தையும், மன்மதன் மனைவியே வியக்கும்படியான அழகும் ஏற்படுகிறது எனப்பாடியருளினார் சௌந்தரியலகரி நூலிலே ஸ்ரீ ஆதிசங்கரர்.

எனவே சாரதாதேவியை எல்லா ஆபரணங்களும் பூட்டப்பட்ட நிலையிலே தியானித்துதரிசித்தால் அடியாருக்கு அழகை அள்ளிக்கொடுத்துவிடுகிறாள். ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீட பரம்பரையில் தோன்றும் ஸ்ரீகுருமகா சன்னிதானங்கள் யாவரும் ஞானமும் செல்வமும் மட்டு மல்ல காணத்திகைக்கவைக்கும் அழகின் சோதியாக விளங்குவதைத் தரிசிக்கும் பாக்யம் பெற்றுள்ளோம். நம் அனைவருக்கும் என்றும் அத்தகைய தெய்வீகக் காட்சிகிடைக்க அம்மையை வேண்டுவோமாக!

கனகத்தை உருவேற்ற தனுவுற்ற ஒளியும்
* காலுற்ற கணமொத்த அணியுற்ற தன்மும்
நில்வுற்ற நினைமிக்கு தேனிக்கும் எவரும்
நிகருற்ற வேளுக்கென்த் திகழ்வா தேவி. 18

சிருங்கேரியில் எழுந்தருளியுள்ள அம்மையின் திருவுருவம் அடுத்த பாடலில் கூறப்பெறுகின்றது. ஒரு திருக்கரத்தில் அமுதகலசம் ஏந்தியுள்ளார். அடியவர்களான குழந்தைகளின் பசிப்பிணியைநீக்க அமுதத்தையே வைத்துள்ளார். மாயவரத்தில் அன்னையை இழந்து வருந்திய கிருஷ்ணசாமி (அபயாம்பிகை சதகநூலாசிரியர்) என்ற அடியவருக்கு 'அழாதே'' எனக்கூறி உணவூட்டினாள். திருவொற்றியூரில் இராமலிங்கசுவாமிகளுக்கு அவரது அண்ணியாரின் உருவில்தோன்றி அன்னமளித்து மறைந்தாள். இதை இராமலிங்கர் அன்றொருநாள் நம்பசி கண்டு அந்தோ தரியாது - நள்ளிரவில் சோறளித்த நற்றாய் காண் எனப்பாடிஉருகுகிறார். பசிப்பிணி தீர்க்கும் அம்மை ஒருகரத்தில் புத்தகத்தையும் ஜபமாலையையும் வைத்துள்ளாள். மற்றொரு திருக்கரத்தால் ஞான முத்திரை காட்டுகிறாள். நம்அறியாமையை அழித்து ஞானமளிப்பதற்காகவே இவைகளைக் கொண்டுள்ளார். (கலாவதி) கலைகளையுடையவள் (காவ்ய ஆலாப விநோதினி) நல்ல காவியங்களைக் கேட்பதிலும் பாடுவதிலும் ஈடுபாடுடையவள். (கலாமாலா) 64 கலைகளின் வரிசை உடையவள். கலைகளுக்கு அழகூட்டி ஒளியையும் அளிப்பவள் (கலாநிதி காவ்யகலா) அழகிய கலைகளின் நிதி. காவியங்களை இயற்ற காளிதாசா, கம்பர் போன்றவர்கட்கு ஆற்றல் அளிப்பவள். காவ்ய ரசஞா, காவியச் சுவையறிபவள். காவியத்தின் உருவும், சுவையும், எழுதும் ஆசிரியரும், தமிழாக்கம் செய்தபுலவரான சக்திதாசனாருக்கு (I.G.ராமநாதனார்) அருள்செய்து, பொருளெழுத இப்புல்லியனைத் தூண்டியவளும் அவளே. ஆனால் நாம் எழுதியதாக நினைக்கவைக்கிறாள். 'அ' முதல் 'க்ஷ' என்ற 51 எழுத்துக்களின் அடையாளமாக 51 மணிகள் கொண்ட ஜபமாலையைக் கையில்கொண்டுள்ளாள்(அட்சமாலா ஆதிதரா). அட்சரமாலையைத் தன்கையில் கொண்டவள்.

ஒரு சமயம் தேவேந்திரன் பூசைமுடித்து 'பூசையின் பொருள்கள், பூசைசெய்யும் பக்தன் எல்லாமாகத் தானே இருந்து கடைசியில் நான் பூஜை செய்தேன் என நினைக்கவைத்த கருணையை என்னவென்று கூறுவேன்'' என மகிழ்ந்தான்.

பூசையும்: பூசைக்கேற்ற பொருள்களும்: பூசைசெய்யும்
நேசனும்: பூசைகொண்டு நியதியில் பேறுநல்கும்
ஈசனுமாகி: பூசையான் செய்தேன் எனும் என்போத
வாசனையதுவுமான மறைமுதலடிகள் போற்றி

என்றான்.

அம்மையின் நெற்றி அரைவட்டச் சந்திரன் போல் விளங்க அதில் கஸ்தூரி அணிந்துள்ளாள். (திருவிளையாடல் புராணம்) முகசந்திர-கலங்க - ஆப - மிருக - நாபி - விசேஷகா என்கிறார் லலிதா சகஸ்ரநாம

ஆசிரியர். 'அமுதகலசம், புத்தகம், சபமாலை, சின் முத்திரைகாட்டும் திருக்கரம் இவற்றை எண்ணினால் நம்துக்கம் பாவம் யாவும் நீங்கி விடும் என்கிறார். பிறபொருளாலும் பிறராலும் நமக்கு ஏற்படும் துன்பம் **ஆதிபௌதிகம்**. நம்மை மீறியகாற்று மழை முதலான வற்றால் ஏற்படும் துன்பம் **ஆதிதைவிகம்**. நாம் செய்த தவறுகள் காரணமாக ஏற்படும் துன்பம் ஆதியாத்மிகம். இம்மூன்றும் உடலால் ஏற்படும் துன்பங்கள். எனவே உடலையளித்த பிறவிப்பிணி நீங்க அம்மையை எண்ணி வணங்கவேண்டும். துக்கத்தை நீக்குபவள் **(துக்க ஹந்த்ரீ)** சுகத்தையளிப்பவள் **(சுகப்ரதா)** என்றபெயர்களும் அம்மைக்கு உண்டு. அத்தகைய துன்பங்களும் உடற் பிணியும் நீங்க அம்மையின் திருவுருவை தியானித்து வணங்குவோமாக!

அமுத கும்பமும் நூலும் அக்கமணிவடமும்
ஆயசின்முத்திரையும் அங்கைகளில் ஏந்தும்
அமுதமுழுமதி எள்ளி ஒளிரும் திருமுகமார்
அம்மையுனை எண்ணி இடர் அகலுவேன் என்றும்
19

அம்மையை யானைபோல் வர்ணிக்கிறார். ஞான சம்பந்தர் அம்மையைப் பெண்யானை **பிடியதன் உரு** என்றார். சிவபெருமான் யானைத்தோலைத் தரித்துள் ளார். அம்மையப்பர்களின் முதல்மகனான விநாயகன் யானைமுகத்தவன். முருகப்பெருமான் ஒருசமயம் யானைவாகனமேறிவந்தார். அம்மையின் மருமகள் ஒருத்தி தெய்வயானை. எனவே அம்மைக்கு யானை சம்பந்தம் நிறையவுண்டு. துங்கபத்திரை நதிக்கரையில் உள்ள ஸ்ரீசாரதாம்பிகை யாவருக்கும் மங்களங்களையே செய்பவள். **மங்களாக்ருதி**. அத்தகைய தோத் திரத்தினால் மகிழ்பவள். **ஸ்தோத்திரப்பிரியா** என்ற பெயரும் அம்மைக்குஉண்டு. நமது தேவையைவிரும்பச் செய்து **(இச்சாசக்தி)** அதை அடையும் வழியை எண்ண வைத்து **(ஞானசக்தி)** அதை அடைய நாம் முயற்சி செய்யவும் **(க்ரியாசக்தி)** உதவுபவள். எனவே அவளை அடைய 1. தேவியின் புகழைப்பாடிப்பரவுவது. 2. வாழ்த்துவது 3. தேவியின் பெருமையைப் பிறருக்கு விளக்குவது. 4. தேவிதுட்டர்களையழித்த பெருமை கூறுவது. 5. தேவி யின் பல அவதாரங்களைக் கூறுவது. 6. நம் மனக்குறை களைத் தெரிவிப்பது இந்த ஆறுவழிகளில் வேண்டி அவள் அருளைப் பெறலாம். அருள்பவள் அம்மை என் பதை **அனுக்ரஹதா** என்பர். அத்தகைய அன்னையின் அருளை அடைவோமாக!

துங்கபத்திரை தீரத்தில் உலவும்
துங்கமதயானை நடைகொண்ட எனதனையே!
மங்களம் யாவர்க்கும் ஆர்த்துமுனைவாழ்த்தி
வாணாள் மகிழ்வுபெறவே வாழவேன் வாணீ
20

தெய்வங்கள் நாம் எப்படி வாழவேண்டும் என வழிகாட்டுகின்றன. மதுரையில் சோமசுந்தரபாண்டியன் எனவந்த இறைவனான சிவபெருமான் உலகில் யாவரும் தெய்வங்களை வணங்கவேண்டும் என்பதற்காக **இம்மை யிலும் நன்மைதருவார்** என்ற கோயிலைத் தாபித்து வணங்கினார் என்பதைக் காணலாம். உலகத்தவர் தின மும் இறைதியானத்தில் ஈடுபடவேண்டும் என்பதை **'தன் திருவுள்ளத்துள்ளே தன்னையே நினைப்பான்** என்று தியானம் செய்துகாட்டினார் என்பார் கம்பர். அம்மை தன்மனத்தை அடக்கத் தெரிந்தவள் **(மனஸ் வினி)** என்பதையும் ஜபமாலை ஏந்தியாவரும் தினமும் ஜபம் செய்யவேண்டும் எனவும் காட்டினாள். மனத்தை யடக்கி அவளையே நினைத்துக்கொண்டிருந்தால் அவ ளாகவே மாறிவிடலாம். குளவி புழுவைக்கொட்டிக் கொண்டேயிருக்கும். புழு குளவியையே நினைத்துக் கடைசியில் தானும் குளவியாக மாறிவிடும். நாமும் அம்மையையே நினைத்தால் அவளாக மாறிவிடலாம். ஆனால், 'என் மனத்தையடக்க முடியவில்லையே!''

யாது சொல்லினும் கேட்பதின்று அந்தோ!
யான் செய்தேன் எனது என்னும் இவ்விருளில்
காதுகின்றது என் வஞ்சக நெஞ்சம்
கடையனேன் செயக்கடவதொன்றறியேன்

என்றார் இராமலிங்கசுவாமிகள். அக்கமாலைகொண்டு உனை எண்ணுகிறேன். குளவியை நினைத்துக்கொண் டிருக்கும் புழுவை மாற்றுவதுபோல் எனை மாற்றி யருள்.

கரத்துச் சதா அக்கமாலை வைத்தாயே
கண்டு புழு வண்டாவதெனயானும் தாயே!
கரத்தக்கமாலை கொண்டு உனைத்துதிக்கின்றேன்
கருணைசெய் மனமுனை நினைத்திருக்கென்றே
21

தனது மனமும் அவயவங்களும் இறைவனுக்கே அர்ப்பணிக்கப்படவேண்டு மென்பர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்.

ஒப்பில் நின்புகழேகேட்க என்செவி; கண்
ஓங்கு நின் உருவமேகாணத்
தப்பினின்றுனையே பாடிட வாய்; கை
தவாதுநின்னடி பணியாற்ற
இப்படியுறுமேல் செங்கதிர் உதயம் எத்திசை
எழினும் மற்றென்னே
கப்பிணர் தருக்கள் சூழ்திருவானைக்கா
அகிலாண்ட நாயகியே.

இதேபோல் தன் அவயங்கள் ஸ்ரீ சாரதாதேவிக்கே உப யோகமாகவேண்டும் என்கிறார் ஸ்ரீ சந்திரசேகரபாரதி மகாசன்னிதானம் அவர்கள்.

தெரிசிக்கஉனை என்கண்: சேவிக்ககையே!
செவிகேட்கநின் சரிதை: துதிசெய்கவாயே!
திருவடி சிரம் தாழ்க! தேனிக்க மனனே!
தேவியம்பிகை அருள் வேறுவேண்டிலனே
22

என ஸ்ரீசாரதா புஜங்க நூலைப் பூர்த்திசெய்தருளுகிறார் ஸ்ரீசுவாமிகள். ★

# செயற்கரிய செய்வர் பெரியர்

- சித்தாந்தரத்தினம் த. ஆறுமுகம்

சைவநாயன்மார் அறுபத்து மூவரும் செயற்கரிய செயல்களைச் சிவபெருமானுக்காகவும் சினடியார் பொருட்டும் செய்தவராவர். அறுபத்து மூவருள் சிறுத் தொண்ட நாயனார் மற்ற எவரும் செய்யத் துணியாத செயல் செய்தவர்.

இவர் திருச்செங்காட்டங்குடியில் வாழ்ந்தவர். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்தவர். இவர் நாள்தோறும் சிவனடியார்களை அழைத்து வந்து அவர் களை முறைப்படி வணங்கி உணவளித்து அதன்பின்னரே தாமும் தம் குடும்பத்தாரும் உணவு உண்ணுதலைக் கடைப்பிடித்து வந்தார்.

அவர் மனைவியார் திருவெண்காட்டு நங்கை. சீராளதேவர் என்ற மகனும் உண்டு.

சிவத்தொண்டு, அடியார் தொண்டுகளில் உறைப் பாயிருக்கும் நாயன்மார் பெருமையை உலகோர் அறிந்து அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதற்காக சிவபெருமான் ஒவ்வொரு நாயன்மார் பொருட்டும் திருவிளையாடல் செய்வார்.

ஒரு நாள் சிவபெருமான் வடநாட்டுப் பயிரவப் பிரிவைச் சார்ந்த சிவனடியார் போல கையில் கபாலம், மூவிலைச் சூலம் உடுக்கையுடன் சிறுத்தொண்டர் இல்லத்தைத் தேடி வந்தடைந்தார். மிகுந்த பசியுடையார் போல காணப்பட்டார். அவர் வந்தபோது சிறுத் தொண்டர் ஒரு சிவனடியாரைத் தேடி அழைத்துவர வெளியில் சென்றிருந்தார். திருவெண்காட்டு நங்கை பயிரவரை இருக்கச் சொன்னார். ''பெண்கள் தனியாக இருக்கும் இல்லத்தில் நாம் இருப்பதில்லை என்று சொல்லி அவ்வூர் கணபதீச்சரம் என்ற திருக்கோவிலில் ஆத்தி மரத்தின் கீழ் இருப்பதாகவும் சிறுத்தொண்டர் வந்தால் அங்குத் தம்மைக் காணலாம் என்றும் சொல்லிப் போனார்.


காலம் கடந்தும், சிவனடியாரை எங்கு தேடியும் காணாத வருத்தத்துடன் வீடு திரும்பிய சிறுத்தொண்ட ருக்கு ஆலயத்தில் பயிரவ அடியார் தங்கியிருக்கும் நற்செய்தியை மனைவியார் தெரிவித்தார்.

கோவிலில் சிவனடியாரைக் கண்டு வணங்கித் தம் இல்லத்தில் வந்து அமுதுசெய்தருள வேண்டும் என்றார். வயிரவர் சொன்னார். ''உம்மைக் காணவே வந்தோம். நாம் இருப்பது வடநாடு, நமக்கு ஏற்ப உணவளிக்க உம்மால் இயலாது. சிறுத்தொண்டர் : ''நீங்கள் உணவு கொள்ளும் முறையைச் சொல்லுங்கள். சிவனடியார் கிடைத்துவிட்டால் கிடைக்காதவையும் கிடைக்கும். அரியன ஒன்றும் இல்லை'' என்றார். சிவ பெருமான் ''ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒரு பசுவை வீழ்த்து உண்போம்'' என்றார். சிறுத்தொண்டர், ''என் னிடம் ஆடுமாடு எருமை மூன்றும் ஏராளமாக உள்ளன. இவற்றில் எது தங்களுக்குப் பிடிக்கும் என்று சொன்னால் உடனே சமைத்து வந்து அழைத்துப் போகிறேன்'' என்றார். வயிரவர் தொடர்ந்தார் ''நாம் உண்பது நரபசு. ஐந்து வயதுக் குழந்தை. உறுப்பில் ஒரு களங்கமும் இருக்கக்கூடாது. இன்னும் கூட சொல்ல வேண்டுவது உண்டு. அதனைச் சொன்னால் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருக்குமே''.

எப்படியும் சிவனடியாரை உண்பிப்பது என்று உறுதி செய்துவிட்ட சிறுத்தொண்டர், ''எதுவும் அரிய தில்லை தயங்காமல் சொல்லுங்கள்'' என்றார். பயிரவர் ''ஒரு குடிக்கு ஒரு சிறுவனாக, தாய் பிடிக்க, தந்தை அரிய வேண்டும். இருவரும் மனம் உவந்து சமைத்த கறியே நாம் உண்போம்'' என்று சொல்ல ''இதுவும் அரிதல்ல, நீங்கள் அமுது செய்வதானால்'' என்று வணங்கி வீடு வந்து சேர்ந்தார் சிறுத்தொண்டர்.

கணவன் கொள்கையைக் காப்பாற்றுவதையே கற்பு நெறியாகக் கொண்ட மனைவியார் ''ஒரு குடிக்கு ஒரு சிறுவனை எப்படிப் பெறமுடியும்'' எனக் கேட்க, தொண்டர் ''நிரம்ப நிதி கொடுத்தால் பிள்ளையைத் தருவார் உளர். ஆனால் எந்தத்தந்தையும் தன் கையால் மகனை அரிய உடன்படார். சரி, நாம் இந்தக்கடமையை நிறைவேற்றும் பொருட்டாகவே ஒரு மகனைப் பெற் றிருக்கிறாய். அவனை அழைப்போம்'' என்றார். (சேக்கி ழார் காலத்தில் நிரம்ப நிதி கொடுத்தால் குழந்தையைக் கொடுத்து விடுவர் உண்டு என்ற நிலைமை பெரு வருத்தத்திற்குரியது) அம்மையார் இசைந்தார், சொன் னார் ''காலத் தாழ்வின்றி சிவனடியார் உணவு உண்ணக் கண்டு மகிழ்வதே - அவர் முகத்தைத் தரிசிப்பதே நம் பேறு.''

பள்ளியிலிருந்து குழந்தையை அழைத்து வந்தார் சிறுத்தொண்டர். தாயார் குழந்தையை அன்புடன் நீராட் டித் தூய்மை செய்தார். வழக்கமாகக் குழந்தையை முத்த மிடுமவர், அடியார்க்கான உண்பொருள் எச்சிலாகி விடுமே என்று முத்தமிட்டாரில்லை.



குழந்தையின் கால்கள் இரண்டையும் மடியில் இடுக்கிக் கையிரண்டும் தம் கைகளால் தாயார் பிடித்துக் கொள்ளத் தந்தையார் கருவியால் தலையரிந்தார். சிவ ன்டியாரை உண்பிக்க உதவியாய் இருந்தானே மகன் என்று தந்தையார் மகிழ்ந்தார். ''இந்த குழந்தை இல்லாதிருந்தால் சிவனடியாரை உண்பிக்க இயலாமல் போய் கணவனார் உயிரை விட்டுவிடவும் கூடும். அப்படி நேராமல் கணவன் உயிரைக் காப்பாற்றி விட்டானே இந்தப் பிள்ளை'' என்று மனைவியார் உவப்பெய்தினார். (கற்புள்ள மங்கையர் பிள்ளையை இழந்தாலும் கணவனை இழக்க இசையார்)

தலை இறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று பணிப்பெண் சந்தனத்தாரிடம் கொடுத்து மற்ற உறுப்பு களைப் பக்குவமாக விரைவாகச் சுவையுடன் சமைத் துக் கணவனுக்கு அறிவித்தார். சிவனடியார் விரும்பிய வாறே உணவமைத்து விட்டோம் என்ற பெரு மகிழ் வோடு கோவிலில் தங்கி இருந்த வயிரவ அடியாரைக் கண்டு ''பசிமிகும் படி காலம் தாழ்ந்து விட்டாலும் நீங்கள் விரும்பியபடி சமைத்து முடிந்திருக்கிறது. எழுந்திருங் கள்'' என்று வேண்டினார். இறைவன் எழுந்தருள, ஒரு ஏழை சங்கநிதி பதுமநிதி இரண்டும் ஒரு சேரப்பெற்றது போல் மகிழ்ந்தார் சிறுத்தொண்டர்.

அடியாரை வரவேற்க, இல்லம் நன்கு அலங் கரிக்கப்பட்டிருந்தது. அடியாரை ஆசனத்தில் இருத்தி அவர் திருவடிகளுக்கு அம்மையார் நீர் வார்க்க சிறுத் தொண்டர் தூய்மை செய்து அந்நீரைத் தம் தலையிலும் வீடெங்கிலும் தெளித்துப் பின், அவரை அருச்சித்துத் தூப தீபம் காட்டிப் பூசையை விதிப்படி செய்து முடித்தனர். பிறகு சிவனடியார் விரும்பியவண்ணம் பரிமாறி னார்கள். சிவனடியார் பார்த்து ''எல்லா உறுப்புகளையும் சிறப்பாகச் சுவையாகத் தான் அமைத்திருக்கிறீர்கள் போலத் தெரிகிறது என்று கூற ''தலை இறைச்சி உண்ப தற்கு ஆகாது என்று அதை நீக்கினோம்'' என்றார், ''அதையும் கூட நாம் உண்போம்'' என்றார் பயிரவர். இருவரும் மனங்கலங்கினர்: உடனே சந்தனத்தாதியார் ''அதையும் கறியமுதாக ஆக்கி வைத்துள்ளேன்'' என்று கொண்டுவந்து கொடுக்கப் பரிமாறினார்கள்.

அதன்பின் வயிரவர் ''தனித்து உண்ணமாட் டோம். சிவனடியார் யாரையாவது அழைத்து வருவீர்'' என்றார். அடியார் உணவு கொள்ள மீண்டும் ஒரு தடையா என்று வருந்திய சிறுத்தொண்டர் அடியார் சொன்ன வண்ணம் செய்வோம் என்று வெளியே சென்று பார்த் தார். அடியார் யாரையும் காணோம் என்று முக வாட்டத் தோடு பயிரவரிடம் தெரிவித்து ''நானும் ஒரு சிவனடி யான்தான். திருநீறு இடுகிறவர்களை வழிபடும் வழக் கம் உடையவன்'' என்றார். அதாவது தன்னை உடன் வைத்துக் கொண்டு இறைவன் சாப்பிடலாம் என்பதைக் குறிப்பாகச் சொன்னார்.

பைரவர் ''ஆமாம். உம்மைப் போல திருநீறு இடுவார் யாருமில்லை. உடன் உண்ணுங்கள்'' என்று திருவெண்காட்டம்மையைப் பார்த்து சிறுத்தொண்டருக் கும் பரிமாறச் சொன்னார். அவரும் பரிமாறினார்.

காலம் கடந்துகொண்டே போகிறது. அடியார் உண்ணவேண்டும் என்பதற்காகச் சிறுத்தொண்டர் உண்ணத்தொடங்கினார். பயிரவர் தடுத்து நகைச் சுவைத் ததும்பச்சொன்னார் ''ஆறு மாதத்திற்கு ஒரு முறை உண் ணும் நாமே அவசரப்படவில்லை. நாள் தோறும் உண்ணு

கிற நீங்கள் அவசரப்படுகிறீர்களே. நீங்கள் ஒரு மகனைப் பெற்றிருந்தீரானால் அவனை அழையும், நம்மோடு உண்ண'' என்றார்.

சிவனடியார் ஏவலுக்கெல்லாம் இசைந்து இயங்கும் உடல்கொண்டு நடமாடும் சிறுத்தொண்டர், வெளியே சென்று ''மைந்தா வருவாய்'' என்றழைத்தார், மனைவியாரும் ''சீராளா வருவாய், அடியார் உடன் உண்ண அழைக்கின்றார்'' என்று உள்ளே இருக்கும் அடியாருக்குக் கேட்கும் வண்ணம் உரக்கக் கூவி அழைத்தார். என்னே வியப்பு! பள்ளியினின்று வருவான் போன்று சீராளன் ஓடிவந்தான். தாய் அவனை அணைத்துத் தந்தையிடம் கொடுக்க ''அடியார் உண்ணப்பெற்றோம்'' என்ற முகமலர்ச்சியோடு உள்ளே வந்தவர்க்குப் பெரும் ஏமாற்றம்! பயிரவ அடியார் மறைந்துவிட்டார். படைத்திருந்த இறைச்சியமுதும் காணோம் (அது சீராளனாக மீண்டும் உருக்கொண்டு விட்டது) அதற்காகத் தான் இறைவன் தலைக்கறியையும் வரவழைத்தார் போலும்!)

இறைவன் எங்கே ஒளித்தார் என்று தேடிக் கணவனும் மனைவியும் வெளியே வர வானத்தில் இறைவன் இறைவி நடுவில் முருகனோடு எருதுவாகனத்தில் காட்சியளித்தார். தொண்டர் குடும்பத்துடன் வீழ்ந்து வணங்கி எழுந்து போற்றி நின்றார்.

சிவபெருமான் சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சந்தனத்தாதியார், சீராளன் நால்வரையும் தம்முடன் கைலாயத்துக்கு அழைத்துச் சென்றார்.

இந்த வரலாறு நமக்குப் பலவகை எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றது.

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

என்ற திருக்குறள் வேரூன்றிவிட்ட தமிழகத்தில் இப்படியும் ஒரு அடியார் வரலாறு தேவைதானா? இறைவனே இப்படி கொலைச் செயலைத் தூண்டுவதா? அதற்கு அடியார் இணங்குவதா? என்றெல்லாம் எண்ணுவோம். ''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் - கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா'' என்ற திருஞானசம்பந்தரின் பாடல்வரிகள் நம் சிந்தனை ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துகின்றன. மற்றொரு பாடலும் அடியார் கொலைச்செயலை நீதியே என்கிறது உண்மை நெறிவிளக்கப்பாடல்:

பாதங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள் வந்திடினும்
தனக்கு என ஓர் செயல் அற்றுதான் அதுவாய் நிற்கில்
நாதன் அவர் உடல் உயிராய் உண்டு உறங்கி நடந்து
நானா போகங்களையும் தானாகச் செய்து
பேதம் அறநின்று இவனைத் தானாக்கி விடுவன்
பெருகவே போகம் எனப் பேசும் நெறி இதுவே.

இப்பாடலின் படி சிறுத்தொண்டர் செயல் எல்லாம் இறைவன் செயலாகவே முடிகிறது. இறைவனை கோவிலில் கண்டு அளவளாவியது வரை சிறுத்தொண்டர் செயலாகவும், அதற்குப் பின் நிகழ்ந்தவையெல்லாம் இறைவன் உடனிருந்து நடத்திய செயலாகவும் கொள்ளலாம்.

இனி, சிறுத்தொண்டர் பிள்ளையை அறுக்க உடன்படுதற்கு அவர் பழக்கவழக்கங்கள், துணை செய்தனவா? சிறுத்தொண்டர் சேனைத் தலைவராக பணிசெய்தவர். பல போர்களில் பலரை வெட்டிக் கொன்று அவர் உடல்கள் துள்ளுவதை துடிப்பதைக் கண்டு இரக்கம் ஒருபுறம் இருந்தாலும் மரத்துப் போன நெஞ்சமும் உடையவர் என்னலாம். அவர் மருத்துவத் தொழிலும் மேற்கொண்டிருந்தார். உடலைக் கீறி அறுவை மருத்துவமும் செய்திருக்கக்கூடியவர்.

**அடுத்து இப்படியும் சிந்திக்கலாம் :-** பயிரவ அடியார் ''ஐந்து வயது சிறுவனை உண்போம்'' என்று சொன்னவுடன் ''இவர் அன்றாடம் வருகிற அடியாருள் ஒருவரல்லர். நம்மை சோதிக்க வந்த ஒருவராக இருக்கக் கூடும். ஏன் இறைவனாகவும் இருக்கலாம். அவர் முகப் பொலிவும் அப்படி இருக்கிறது. இதுவரை எத்தனை சிவனடியார் வரலாறுகளைக் கண்டிருக்கிறோம் கேட்டும் இருக்கிறோம். கண்ணப்பரின் கண்ணைப் பறித்தவராயிற்றே. ஏன் பிள்ளைக் கறி கேட்கமாட்டார் இதன் முடிவைப் பார்த்தே விடுவோம்'' என்று துணிந்திருக்கலாம்.

கறியாக சமைக்கப்பட்டு விட்ட மகனை அழைக்கச் சொன்னாரே! ''அவன் இங்கு இப்போது உதவான்'' என்று சொல்லி இருக்கலாமே! சில நேரங்களில் எண்ணத்தினும் உட்லும் உடல் உறுப்புகளும் விரைந்து செயல்படுகின்றன.

''உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவது நட்பு''

**என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரை :-** அற்றம் காத்தற்கண் கை தன் மனத்தினும் முற்படுதலின் அவ்விரைவு இடுக்கண்களையும், அதற்கொத்த தொழில் உவமையின் வருவிக்க என்பது. இதன்படி சிவனடியார் மகனை அழைப்பாய் என்றதும், மனத்தினும் முற்பட்டு சிறுத்தொண்டர் தம் உடலும் வாயும் செயல்பட்டு மகனை அழைக்க நேர்ந்தது.

(காரைக்காலம்மையார் வரலாற்றிலும் கணவன் ''இன்னொரு மாம்பழம் கொண்டு வா'' என்றதும் அவர் மனத்தினும் உடல் முற்பட்டு அவ்விடத்தினின்று நீங்கிச் சென்றது. பிறகு மனம் செயல்பட ''கனிக்கு நான் என் செய்வேன்'' என்று இறைவனிடம் முறையிட்ட நிலையைக் கருதிப்பார்க்கலாம்).

இனி, சிறுத்தொண்டரைப் போல வேறு அடியார் எவரேனும் இறைப்பணிக்காக பிள்ளையை இழந்தவர் உண்டோ? என்றால் :-

வைணவ அடியார் கபீர்தாசர் வீட்டிற்கு நூற்றுக் கணக்கான சாதுக்கள் ஒரு நாள் முன் இரவில் வந்து விட்டார்கள். அவர்களுக்கு உணவு படைக்க இயலவில்லை. கபீர் தன் மகன் கமாலை அழைத்துக் கொண்டு மூடிக்கிடந்த ஒரு மளிகைக் கடையை அடைந்தார். கடையில் ஒரு ஓட்டை இருந்தது. அதன் வழியாக மகன் புகுந்து தேவையான மாவு நெய் முதலிய பண்டங்களை எடுத்துக் கொடுக்க கபீர் பெற்றுக் கொண்டார். மகன் வெளியேறுவதற்குள் கடைக்காரன் வந்துவிட்டான். ஓட்டைக்கு வெளியே மகன் தலையும், உள்ளே உடலும் இருக்க கடைக்காரன் கால்களை பிடித்துக் கொண்டான். மகன் கமால் தந்தையிடம் சொன்னான். ''என் தலையை அறுத்துக் கொண்டு போய்விடுங்கள். மகேசுர பூசை நடக்கட்டும். தலையிருந்தால் அடையாளம் தெரிந்து விடும். தலையில்லாவிட்டால் அடையாளம் தெரியாது'' கபீர்தாசர் முதலில் தயங்கினார். பிறகு தாம் தறிவேலை செய்வதற்காக வைத்த கத்தியால் மகன் தலையை அறுத்துக் கொண்டுபோய் விட்டார். கடைக்காரன் கமாலின் உடலை கொத்தவாலிடம் ஒப்படைக்க அவன் உடலை, திருடர்களுக்குப் படிப்பினையாக, பொதுச் சாவடியில் தொங்க விட்டான். மகேசுர பூசை நிறைவேறியது.

மறு நாள் சாதுக்கள் பாடிக்கொண்டே ஊர்வலமாக வந்தனர். தலையில்லாத உடல் கைகூப்பி வணங்கிற்று. சாதுக்கள் திகைத்தனர். அப்போது இறைவனுடைய அசரீரிக்குரல் கேட்டது: ''மகனைக் கொன்றேனும் அன்னமிட்ட கபீரின் தியாகத்திற்கு உலகமே தலைவணங்கும். கமாலே எழுந்திரு எழுந்திரு!! உடனே கபீரிடம் இருந்த கமாலின் தலை உடலோடு வந்து சேர்ந்து கொண்டது. கமால் ''அரிநாராயணா, அரி நாராயணா'' என்று துதித்தான்.

இப்படி கொலைச் செயலுக்கு இறைவனே துணை நின்றாலும், வீர சைவ அடியார்களுள் ஒருவர் சிறுத்தொண்டர் செயலையும், மற்றொருவர் சிறுத்தொண்டர் இறைவன் இருவர் செயலையும் மறுத்துரைக்கும் போக்கைக் காண்போமாக!

புதலை என்ற ஊரில் நிம்மவை, வீரசைவப் பெண் அடியார். மடங்களுக்குத் தண்ணீர் கொண்டுபோய் கொடுக்கும் ஒரு எளியவர். அவர் மகன் மடத்துப் பசுக்களை மேய்ப்பவன்.

சிறுத்தொண்டர் கயிலையில் சிவபெருமான் அருகில் இருக்கிறார். தம்மைப் போல் மகனையே உணவாக்கிப் படைத்தவர் யாருமில்லை என்ற செருக்கு அவரிடம் இருந்தது. அதைப் போக்க சிவபெருமான் அவரை அழைத்துக் கொண்டு நிம்மவை வீடுவந்து சேர்ந்தார். அடியார்களாக வந்த அவர்களை நிம்மவை வரவேற்று பணிவிடைகளைச் செய்து, இருக்க வைத்து சமையல் செய்து முடித்து குடிநீர் கொண்டுவரப்போனார்.

இடையில் மகன் வந்தான். செய்துவைத்திருந்த அதிரசம் ஒன்றைத் தின்றுகொண்டிருந்தான். நிம்மவை அதுகண்டு ''சிவபெருமானுக்குப் படைக்கவிருந்ததைத் தின்றாயே'' என்று அடித்தார். மகன் இறந்துவிட்டான். அவன் உடலை கொல்லைப்புறத்தில் மறைத்துவிட்டு பழைய சமையலை எறிந்துவிட்டு புதிதாக சமைத்தார். அடியார்களுக்குப் பரிமாறினார். அடியாரான சிவபெருமான் சொன்னார் ''உன் மகன் பசியோடு வெளியே சென்று விட்டான். அவனை அழைப்பாய் அவனோடு சேர்ந்து உண்போம்.''

அப்போது நிம்மவை சொன்னார். ''இறைவனே எனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணிக் கொண்டு விட்டீரா. நீர் விளையாட்டாகப் பேசுகிறீர். சிறுத்தொண்டன் பிள்ளைப்பாசத்தால் தன் இறந்து போன மகனைக் கூவி அழைத்தானே! அப்படி நான் அழைப்பேன் என்று கருதிவிட்டீரா?'' இதைக் கேட்டுக்கொண்டிருந்த சிறுத்தொண்டருக்கு வெட்கம் உண்டாயிற்று. அவர் செருக்குக் குறைந்தது.

இந்த வரலாற்றில் சிறுத்தொண்டர் மகனை இறைவன் அழைக்கச் சொன்னபோது உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் மகனைக் கூவி அழைத்தது பிள்ளைப்பாசத்தால் என்பது வீரசைவப் பெண் அடியார் நிம்மவை கருத்து.

அடுத்துச் சிவபெருமான் சிறுத்தொண்டரை அலாயுதர் என்ற வீர சைவ அடியார் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். அலாயுதர் இருவரையும் வரவேற்றுப் பணிவிடைகள் செய்தார். சிவபெருமான் சொன்னார்: ''நமது விருப்பத்தைக் குறிப்பால் அறிந்து நிறைவேற்றுகின்ற சிவனடியார்களிடம் மட்டுமே செல்வோம். அவர்களும் நம்மைச் சிவனாகவே பாவித்து வணங்குவார்கள். அவர்களையே நாமும் பாராட்டுவோம்.''

தொடர்ந்து சொன்னார் ''திருச்செங்காட்டங்குடியில் தோன்றிய சிறுத்தொண்டன் மன உறுதியை உலகத்

# ஒன்றே குலம் ஒருவனே இறைவன்

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப்பல்கலைக்கழகம்

அர்த்தநாரீசனில் அம்மன் ஒடுக்கம்
அரிகர வடிவில் திருமால் அடக்கம்
பிரம்மன் இருப்பது சிவனது வலப்புறம்
பரமனிடத்தில் யாவரும் அடைக்கலம்

சோமாஸ்கந்த வடிவில் முருகன்
உமாமகேசுவரம் கொண்டது கணபதி
சூரியசந்திரர் அவனிரு விழிகள்
ஐம்பெரும்பூதம் அவனது வடிவம்

நாகம்பூதம் நவகிரகம் அசுரர்
பறவை மிருகம் தெய்வம் எல்லாம்
சிவபூஜை செய்தே நாளும் நலம்பெறும்.
சிவபக்தர்க்கு என்றும் நலமே செய்திடும்

எந்நாட்டவர்க்கும் இறைவன் சிவனே
எல்லோருக்கும் தந்தை தாயும் அவனே
உடலுக்கு உயிர்போன்று எல்லோருக்கும் சிவம்
சிவம்நீங்கி நின்றாலோ எல்லாம் சவம்

உலகம் முழுவதும் உள்ளது ஒரே குலம்
உண்மையை உணர்ந்தால் வந்திடும் பெருநலம்.

---

தார் தெரிந்து கொள்ளும் பொருட்டு சிவபெருமான் அடியாராக வந்து தொண்டரின் அன்புக்குரிய பிள்ளையைக் கறியமுதாக்கிப் படைக்கும்படி கேட்டார். அவரும் அப்படி படைத்தார். சிவபெருமான் அவரைக் கைலாயத்தில் மகிழ்ச்சியாக வாழச் செய்தார். சிறுத்தொண்டர் பெருமையே பெருமை.''

உடனே அலாயுதர் ''இது என்ன கொடுமையான செய்கை? இது அறமாகுமா? இந்தப் பாவச் செயலைப் புகழ்வதால் என்ன பயன்? மிகக் கொடியவரான அரக்கர் உண்ணும் மனிதனைச்சிவபெருமான் எதிர்பார்க்கலாமா? சிவனடியாரின் பிள்ளையும் சிவனடியார் தானே. அத்தகையவன் உடலை அறுத்துச் சமைத்துப் படைத்தவனை அன்புடையவன் என்றும் சிவ நேயம் உடையவன் என்றும் அவன் வழிபாடு சிறந்தது என்று சொல்லுவதும் எப்படி? எனக்கு இதில் ஐயம் தோன்றுகிறது'' என்றார்.

சிவபெருமான் பதிலளித்தார் ''இப்போதும் செங்காட்டங்குடியில் பெண்கள் நெல் குத்தும்போது சிறுத்தொண்டர் புகழைப்பாடி தான் நெல்குத்துகிறார்கள், அவர் பெருமைக்கு இது சான்றல்லவா?''

அலாயுதருக்குக் கோபம் உண்டாயிற்று. சொன்னார்: ''இறைச்சியைச் சைவன் கண்ணாலும் பார்க்கத் தகுமோ? சிறுத்தொண்டன் சிறந்த அடியான் அல்லன். மனித ஊனைத் தவிர வேறெதுவும் சிவபெருமான் தொண்டைக்குள் செல்லாதா? சிவபெருமானும் புறம்பு, சிறுத்தொண்டனும் புறம்பு. ''என்று பூமியின் மீது கை அறைந்து உரக்கச் சொன்னார்.

புறம்பு (புறக்கணிக்கத்தக்கவர்) என்று சொல்லக் கேட்ட இருவரும் மன வாட்டம் அடைந்தனர். அலாயுதர் மேலும் சொன்னார் ''புலால் உண்ணும் புண்ணிய கதைகளை இனி புகழாமல் விட்டு விடு. இனி என் முன் நிற்காதே போய்விடு.''

சிவபெருமான் உமாதேவியை நினைத்தார். உமாதேவி திருவெண்காட்டு நங்கையை உடன் அழைத்துக் கொண்டு அலாயுதர் வீட்டுக்கு வந்தார். இருவர் திருவடிகளிலும் அலாயுதர் வணங்கினார், திருவடிகளைப் புனித நீரால் கழுவிப்பின் அமுது செய்ய அழைத்துச் சென்றார்.

உமாதேவி அலாயுதரைப் பல வகையாகப் புகழ்ந்து, ''நாங்கள் உம்மை ஒரு நற்பேறு வேண்டுகிறோம். இவர் திருவெண்காட்டு நங்கை. நான் பார்வதி. சிவபெருமானையும் சிறுத்தொண்டரையும் புறம்பு என்றதால் அவர்களிடம் சிலக்குறைவு உண்டாகி விட்டது. அதைப் போக்கி அவர்களைத் தூய்மை செய்ய வேண்டும். ''என்றார். திருவெண்காட்டு நங்கை அலாயுதர் காலில் வீழ்ந்து வணங்கினார். பின் அலாயுதர் பொன்மயமான தேர் ஏறி கயிலை அடைந்தார் என்பது வரலாறு.

இத்தகைய அடியார்களைப் புகழ்ந்தே சேக்கிழார் ''வீரம் என்னால் விளம்பும் தகையதோ?'' என்று வியந்து கூறியிருப்பது நாம் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

# இமாலாயச்செலவு

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

அடியேன் இளமையிலிருந்து, வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளை குருவாக ஏற்று திருப்புகழ் பாடும் பணியை பணியாகப் பெற்றதன் பயனே, தன்நிழலை தானே தாங்கிக்கொண்டிருக்கும், தஞ்சைகோபுரம் போல், முதுமையில் அடியேன் உடலம் தன் ஊழ்வினையை தானே அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில், இறை உணர்வு மலர ஆரம்பித்தற்கு அறிகுறியாக ஆன்மீக அரிச்சுவடி ஏட்டில் அடியெடுத்து வைக்கும் பாக்கியம் பெற்றேன்.

இந்தியாவில் வடபகுதியான இமாச்சல பிரதேசத்தில் முக்கியத்துவம் வாய்ந்த நவசக்தி பீடங்களை நவராத்திரியில் தரிசிப்பது விசேஷம் என ஆன்றோர்களால் அறிய கேட்டதன் பயனே, ஒன்பது சக்தி பீடங்களையும் அடியேன் என் மனைவியுடன் சேர்ந்து தரிசிக்கக் கிடைத்த பேறாகும்.

இமாச்சலப் பிரதேசத்தில் சக்திப் பீடங்களை தரிசிக்க செல்லும் மார்க்கத்தில் உள்ள புராதனச் சிறப்பு வாய்ந்த சில இடங்களை பற்றி கேள்விப்பட்டிருந்ததால் அவைகளையும் தரிசித்துவிட்டு அதன் அருமைப் பெருமைகளை உங்கள் நினைவிற்கு கொண்டுவருவது சிறப்பாகும் எனக் கருதுகிறேன்.


முதற்கண் 1997-ஆம் ஆண்டில் அடியேன் என் மனைவியோடு கல்கத்தா செல்ல நேர்ந்த சமயம் கீர்த்தி வாய்ந்த காளி தேவியையும் தட்சனேஸ்வரத்திலுள்ள இராமகிருஷ்ணபரமஹம்சரின் மடத்தையும் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது, இங்கு வீற்றிருக்கும் கல்கத்தா காளி நவசக்திகளில் ஒன்று என்பதாகவும், இங்குத்தான் சக்தியின் முடிகள் வீழ்ந்த இடம் என்றும் அறியலானோம். அண்மையில் தெய்வீகப் பொலிவோடு வாழ்ந்த ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும், காளிகாதேவி ஆலயத்தோடு தொடர்பு கொண்டிருந்தார் என்பதையும் அறிந்து கொண்டோம்.

கல்கத்தா தட்சிணேசுவரத்தில் பவதாரணி என்னும் காளி கோயிலில் தான் இராமகிருஷ்ண பரமஹம்சர் பூஜை செய்யும் பணியை ஏற்றார். இவர் காளி தேவியை நேருக்கு நேர் தரிசிக்க எண்ணம் கொண்டு அக்கோயிலைச் சேர்ந்த பஞ்சுவடி என்னும் இடத்தை தேர்ந்தெடுத்து ஆழ்ந்த சிந்தனையோடு இரவென்றும், பகலென்றும் பாராது தியானம் செய்தும் தரிசனம் கிடைக்கப் பெறாததை எண்ணி காளி கோயிலில் இருந்த வாளால் தன்னை மாய்த்துக்கொள்ள முற்பட்டதும், காளி தேவி கதாதரர் என்னும் இராம கிருஷ்ணருக்கு தரிசனம் தந்து அருளியதாக சரித்திரம் கூறுகிறது. இவ்வரலாற்றினை புராணம் எனக்கொள்ளாது, சரித்திரவாயிலான அண்மையில் நடந்த நிகழ்ச்சியாகவே கொள்ள வேண்டும். காளி தேவியையே தன் இதயக்கமலத்தில் வைத்து தியானம் செய்ததால் இவருக்கு ஏற்றமும், தோற்றமும் தோன்றலாயின.

4.10.99-ஆம் ஆண்டில் அடியேனும் என் மனைவியும் இறையருள் கூட்ட சென்னையிலிருந்து ஜம்முவிற்கு புகைவண்டி மூலமாய் சென்றடைந்தோம். அங்கிருந்து 52 கி.மீ. தூரத்திலுள்ள கட்ரா என்னும் இடத்திற்குப் பேருந்து மூலமாய் இரண்டு மணி நேரத்தில் போய்ச் சேர்ந்தோம், அதனருகிலுள்ள திரிகூட மலையில் வைஷ்ணவி தேவியை தரிசிக்க எண்ணம் கொண்டோம். திரிகூட மலை மீதுள்ள வைஷ்ணவி தேவியை தரிசிக்கும் வாய்ப்பு எங்களுக்கு முதுமையில் கிட்டிய பெரும் பாக்கியம் என்றே கருதினோம், இம்மலைக்குகையில் வீற்றிருக்கும் தேவியின் பீடமும் நவசக்தி பீடங்களில் ஒன்றாகும் என அங்குள்ளவர்களால் கேட்டு அறியலானோம்; மேலும் இவ்விடத்தில்தான் சக்தியின் கரங்கள் வீழ்ந்த இடம் என்றும் கூறக்கேட்டோம்.

இங்குள்ள கர்ப்பக்கிரகம், கற்குகையில் இயற்கையாய் அமைந்துள்ளதை கண்டு வியந்தோம், சுமார் 30-அடி தூரம் வரை குகைவழியாய் தலையை குனிந்தே தரையில் முழங்கால் வரை ஓடும் குளிர்ந்த நீரையும் சகித்துக் கொண்டு சென்றதும், மறுபடியும் இப்பாதையின் நடுவே சுமார் 3 அடி உயரம் உள்ள சிறிய மேடான கற்பாறையின் மேல் ஏறி - இறங்கி சிறிது தூரம் சென்றபிறகே தேவியை தரிசிக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. கர்ப்பக்கிரகத்தில் சுயம்பு வடிவத்தில் இருக்கும் மூன்று பிண்டிகளையே மகா லட்சுமி, மகா காளி (வைஷ்ணவி தேவி), மகா சரஸ்வதி என்பதாக அங்குள்ள பட்டர்களால் அறியக்கேட்டோம்.

இதுபோன்று குகை வழியாக செல்லும்போது முதற்கண் தேவியை வணங்கத் தலைதாழ்த்தியே செல்லும் சம்பிரதாயத்தையும், ஆலயம் செல்லும் முன் கை, கால்களை சுத்தம் செய்துகொண்டு செல்லும் முறையினையும் நமக்கு முன் கூட்டியே அறிவிப்பது போன்று இவ் வாலயம் இயற்கையாய் அமைந்துள்ளது நினைக்குந்தோறும் உள்ளம் புல்லரிக்கச் செய்கிறது. தேவியை



தரிசனம் செய்ய எங்களுக்கு 4 அல்லது 5 நிமிடமே கிடைத்தது, தரிசனம் முடித்து குகையிலிருந்து வெளியே வந்ததும், காரைக்கால் அம்மையார் கைலாயத்துக்கு சென்று திரும்பியதை நினைவூட்டும் பாணியில் எங்களுக்கும் ஒரு பிரேமை உண்டாயிற்று, இனி மறுபிறவி உண்டு என்றால் உனை என்றும் மறவாமையை எங்களுக்கு தந்தருள வேண்டுமென வேண்டிக்கொண்டு அங்கிருந்த ஜம்மு மூலமாய் 8.10.99 அன்று டில்லி வந்தடைந்தோம்.

8.10.99 அன்று நாங்கள் டில்லியை அடைந்ததும், வழக்கமாக தங்குமிடமாகிய கரோல் பாக்கில் உள்ள ஆரிய சமாஜத்தில் தங்கச்சென்ற சமயம், 45 - வயது மதிக்கத்தக்க ஒரு துறவியை சந்தித்தோம். அவர் கடந்த 4-மாதங்களாக இரு சக்கர மிதி வண்டியிலேயே இராமேசுவரத்திலிருந்து டில்லி வரையிலுள்ள எல்லாத் தலங்களையும் தரிசித்துவிட்டு தற்சமயம் இவ்விடத்தில் தங்கி உள்ளதாக கூறினார்.

சிரசிலிருந்து இடுப்பு வரை உருத்ராட்ச மாலைகளை அவர் அணிந்திருந்ததைக் கண்டு எங்களுக்கு வியப்பாக இருந்தது. எங்களோடு 8.10.99 வெள்ளி அன்று ஆர்யசமாஜத்திலேயே உடனிருந்து இறை சம்பந்தமான கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. நாங்கள் துவங்க இருக்கும் சக்தி பீடங்களின் புனித யாத்திரையைப் பற்றி கேட்டதும் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, யாத்திரை பூரண நிறைவோடு முடிவு பெற எங்களை ஆசிர்வதித்தது எங்களது பாக்கியம் எனக் கருதினோம்.

எங்களது புனித யாத்திரை அனுகூலமாக நிறைவு பெறவே இத்தகு துறவியின் சந்திப்பு எங்களுக்கு கிட்டியது போலும் என எண்ணினோம். 8.10.99 அன்று இரவே நாங்கள் டில்லியிலிருந்து கல்கா என்னும் ஊருக்கு பயணம் மேற்கொள்ளும் தருவாயில் எங்களோடு உடனிருந்து வழி அனுப்ப எங்கள் குருநாதரே இவருடைய உருவத்தில் வந்து துணைபுரிந்ததாக எண்ணி மன நிறைவோடு இமாச்சலப் பிரயாணத்தை துவங்கினோம். இதுபோன்ற துறவியின் சந்திப்பு எந்த முன்னறிவிப்பும் இன்றி இறைவனால் அருளிச் செய்யப்பட்டதைப் போகும் வழியெல்லாம் எண்ணி எண்ணி வியந்தோம். அடியேன் அத்துறவியிடம், சக்தி பீடங்களை தரிசித்து விட்டு, டில்லி திரும்புகையில் மீண்டும் சந்திக்க வாய்ப்பு அளிக்கும்படி கேட்டுக்கொண்டோம். அத்துறவி தமது பயணத்தை டில்லியிலிருந்து மேலும் தொடரப்போவதாகவும் இறைவன் திருவருள் கூட்டுவித்தால் சந்திப்போம் எனவும் பதில் அளித்தார்.

நாங்கள் 8.10.99 வெள்ளி இரவே சண்டிகர் வழியாக கல்கா என்னும் ஊரை 9.10.99 விடியற்காலை 4 மணி அளவில் அடைந்தோம், உடனே அங்கிருந்து குறுகிய மலைப்பாதையில் புகை வண்டியில் காலை 4.30 மணி அளவிற்கு சிம்லா என்னும் இடத்திற்குப் புறப்பட்டோம். கல்காவிலிருந்து சிம்லாவிற்குப் பஸ்ஸிலும்

போக வசதியுண்டு. கல்காவிலிருந்து சிம்லா ஏறத்தாழ 80 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

மலைப்பாதையில் குறுகிய புகைவண்டியில் காலைப்பயணம் செய்வது இனிமையான அனுபவம் ஆகும். கல்காவிலிருந்து குறுகிய புகைவண்டியில் மலைப் பாதை வழியாக செல்லும்போது இருபுறங்களிலும் ஆங்காங்கே மலைப்பகுதியில் உள்ள வீடுகளில் அதி காலை இருட்டில் மின் விளக்குகள் எரிவது, உமா தேவியே வைரக் கற்கள் பதித்த பச்சைகம்பளத்தால் ஆன போர்வையை அணிந்திருந்தது போல் காட்சி அளித்தது.

இத்தகு காட்சியை காண்பது, இறைவனால் எங் களுக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதம் என்றே கருதி னோம். ஒரு முறை பயணம் செய்தாலே வாழ்க்கை முழுவதும் இயற்கை அன்னையின் இனிய காட்சிகள் நம் மனதில் பசுமையாக நிலைத்து நிற்கும் விதத்தில் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. காலை 10.30 மணியளவில் 7166 அடி உயரம் உள்ள சிம்லா என்னும் எழில் கொஞ்சும் நகரத்தை அடைந்தோம். சியாமளா என்னும் தேவியின் இருப்பிடமாக இருப்பதால், இதற்கு சியாமளா என்ற பெயர் முதலில் வழங்கலாயிற்று. பிற் காலத்தில் சியாமளா என்ற பெயர் சுருங்கி சிம்லா என்று வழங்கலாயிற்று.

சிம்லா பஸ் நிலையம் உலகிலேயே மலைப் பிரதேச பஸ் நிலையங்களுள் முதன்மையானதாகும். சிம்லா நகரமானது இமாசலப் பிரதேசத்திற்கு தலைநகர மாகும். சிம்லா ரயில் நிலையத்திற்கு அருகிலேயே மேட்டுப்பாங்கில் உள்ள ''ராம்மந் திர்'' என்னும் தங்கும் இடத்தில் தங்கினோம். மாலை 3- மணியளவில் சிம்லா வில் உள்ள (Sandal point) ஸாண்டல் பாயிண்ட் என்னும் உல்லாச வாச ஸ்தலத்தையும், அதற்கு 2 கி.மீ. தூரத்தில் 8300 அடி உயரத்தில் கொண்ட Jaggu Hill ஜக்குஹில் என்னுமிடத்தில் அனுமன் சஞ்சீவி மலையை எடுத்து வருகையில் இளைப்பாறிய இடத்தையும் கண்டுகளித்து விட்டு, மால்ஏரியா என்னும் சிறிய மேட்டுப்பாங்கான இடத்தில் இருக்கும் கடைவீதிகளையும், பழைய இம்பீரி யல் கட்டிடத்திற்கு அருகிலே உள்ள சிம்லாவை நிர்வாகம் செய்த லாலாலஜபதிராயின் உருவச்சிலையும் கண்டு விட்டு, இரவு விடுதியில் தங்கிவிட்டோம்.

மறுநாள் 10.10.99 ஞாயிறுகாலை 7 மணியளவில் சிம்லாவிலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ள குப்ரி (Kufri) (இதன் உயரம் 8450 அடி) என்னும் இடத்தில் பனிச்சறுக்கு இடத்தையும் கண்டு ரசித்துவிட்டு, உடனே 190 கி.மீ. தூரத்தில் உள்ள குளு என்னும் ஊருக்குப் புறப்பட் டோம், மதியம் உணவுக்காக நடுவழியில் தாபா எனப் படும் சிற்றுண்டி நிலையத்தில் பஸ் நின்றதும், அவ் விடத்தில் பால முருகன் மயில் மேல் அமர்ந்து காட்சி அளிக்கும் ஒரு பெரிய படத்தை சுவரில் மாட்டி இருந்த தைக் கண்டதும், திருவொற்றியூரில் சங்கிலியாரை கண்ட தும் சுந்தரர் இளமைமீதுற இன்பத்துறையில் எளியரா னது போன்று, அடியேனதும் மனமும் பாபா பாலகநாத் என்னும் முருகனின் படத்தைப்பார்த்ததும் அவனழகில் மயங்கி எளியனானேன்.

''செங்கோடைக் குமரன் என எங்கே நினைக் கினும் அங்கே வந்து எதிர்முன் நிற்பனே!'' எனும் கந்த ரலங்காரப் பாடல் ஞாபகத்திற்கு வந்தது. அப்படத்தைப் பற்றி ஓட்டல் முதலாளியை விசாரித்ததில், குளு அல்லது மனாலியில் கிடைக்குமென்று சொன்னார். அங்கிருந்து புறப்பட்டு மாலை 6 மணி அளவில் குளுவை அடைந்து, பஸ் நிலையம் அருகில் உள்ள ''சயாலி மகாதேவ் தர்மசாலா'' எனும் இடத்தில் தங்கினோம். இவ்விடத் தில் விமானதளமும் உண்டு, அன்று அவ்வூரில் நவ ராத்திரி விழா கோலாகலமாக நடக்கும் காட்சியை கண்டு களித்தோம். குளுவில் பாபா பாலகநாத் எனும் முருகன் படம் வாங்கச் சென்றபோது எங்குமே கிடைக்காமல் போகவே, சீதையைப் பறிகொடுத்த இராமரின் மன நிலையைப் போல் என் மனமும் ஏக்கமடைந்தது.

மறுநாள் 11.10.99 திங்கள் காலை 7 மணிக்கு அங் குள்ள ரகுநாத் மந்திர், பிஜ்லி மகாதேவ் மந்திர் என்ற ஆலயங்களையும் தரிசித்துவிட்டு, அங்கிருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ள மணிக்கரண் என்ற தலத்திற்குப் பேருந் தில் பயணமானோம். உமையவள் ஊர்த்துவதாண்டவம் ஆடும் போது காதில் உள்ள குண்டலம் இங்கு விழுந்த தாக அறியலானோம், இவ்விடத்தில் அளவுக்கதிகமான சூடான வெந்நீர் ஊற்று வருடம் பூராவும் ஓடுகிறது. அதில் குளித்துமகிழ்ந்தோம். அதன் பக்கத்திலேயே வியாசர் ஆறு எனப்படும் பியாஸ் ஆறு மிகுந்த குளிர்ச்சியோடு பாய்ந்து ஓடுவது மிகவும் வியப்பிற்குரியதொன்றாகும். இறைவனது சிருஷ்டியின் லீலையை என்னவென்று சொல்வது? அங்குள்ள மக்கள் அரிசி, பருப்பு, காய்கறி, களைக் கொண்டு ஊற்றெடுத்து வரும் வெந்நீரிலேயே உணவை தயாரித்துக் கொள்கிறார்கள். அங்கு சீக்கியரின் குருத்துவாரா மந்திரையும், ரகுநாத் மந்திரையும் தரிசித் தோம். இவ்விரு ஆலயங்களிலும் தினமும் காலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை சாப்பாடு, சப்பாத்தி, சப்ஜி, லஸ்ஸி போன்றவைகளை விளம்பரம் இல்லாமலேயே யாவருக்கும் இல்லை என்னாது இலவசமாக வழங்கி வருவது மிகவும் பாராட்டுவதற்குரியதாகும்.

தானங்களில் சிறந்தது அன்னதானம் என்பதை கண்கூடாக நிரூபிக்கும் வகையில் ஒருவித விளம்பர மும் இன்றி இமாலய பிரதேசம் விளங்குகிறது என்றால் உண்மையில் இது வியப்பிற்கு உரியதாகும். மதியம் உணவை குருத்துவாரில் முடித்துக் கொண்டு, அங் கிருந்து 15. கி.மீ. தொலைவிலுள்ள பார்வதி லேக் என்ற இடத்தில் கார்த்திகேயன் ஜனித்த சரவண பொய்கை ஒன்று உள்ளதாகக் கேட்டறிந்தோம். ஆனால் 10 கி.மீ. வரைதான் ஜீப்பில் செல்லமுடியும் என்றும் மேலும் 5 கி.மீ. தூரத்தை மலைப்பாதை வழி யாகத்தான் நடந்து செல்லவேண்டும் எனக் கூறக் கேட் டதும் எங்களால் அங்கு செல்ல முடியாது போய்விட்டது. அதனால் அதைப்பற்றி விவரிக்க இயலவில்லை, மணிகரணிலிருந்து பார்வதி லேக் இருக்கும் திக்கை

நோக்கி வணக்கம் செய்து, அருணகிரியார் வேடிச்சிகா வலன் வகுப்பில் பாடியுள்ள,

''உவகையொடு கிருத்திகையர், அறுவரும் எடுக்க — அவர் ஒருவர் ஒருவர்க்கு அவண் ஓர்புத்ரன் - ஆனவனும்''

என்னும் அடியை 6 முறை ஓதி, உடனே அங்கிருந்து பேருந்தில் மாலை 6.30 மணிக்கு புறப்பட்டு குளு என்னும் இடத்திற்கு திரும்பவும் வந்து அடைந்தோம்.

மறுநாள் 12.10.99 செவ்வாய்க் கிழமையன்று காலை 7 மணி அளவில் குளுவிலிருந்து 40 கி.மீ. தூரத்தி லுள்ள மனாலிக்கு பேருந்தில் பயணம் ஆனோம். குளு விலிருந்து மனாலி வரை, சாலையின் இருபுறங்களிலும் ஆப்பிள் தோட்டங்களைக் கண்டுகளித்தோம். இங்கு யார் வேண்டுமானாலும், எவ்வளவு தேவைப்பட்டாலும், பறித்தோ, கீழேவிழுந்து கிடக்கும் ஆப்பிள் பழங் களையோ, பணம்காசு இன்றி எடுத்து சாப்பிடலாம்.

இச்செய்தியை அறிந்ததும், ஆப்பிள் சாப்பிட யாவருக்கும், வாயில் நீர் ஊறும் என கருதுவதில் தவறு ஏதுமில்லை, அதைவிட ஆப்பிளைப் பற்றிய செய்தியை அறிய யாவருக்கும் சிந்தனையில் ஊற்றெடுத்தால் மனத்திற்கும் சாந்தியளிக்கும் என்பதில் சந்தேகமில்லை, அதைப்பற்றி நாங்கள் குளுவிற்கு சென்றிருந்த போது, அடியேன் இளமையில் படித்த ஆப்பிளைப் பற்றிய செய்திகள் ஞாபகத்திற்கு வரவே அங்குள்ளோரிடம் அதைப் பகிர்ந்துகொள்ளலானேன்.

குளுவிலிருந்து மனாலி வரை ஆப்பிள் விளை யும் பள்ளத்தாக்கு ஆகும். முற்காலத்தில் ஆப்பிள் பழம் இந்தியாவில் கிடையாது, முதன் முதலாக ஆப்பிள் (மரத்தை) உற்பத்தி செய்வதை, 1915-ஆம் ஆண்டு கலிபோர்னியாவிலிருந்து சிம்லாவிற்குக் கொண்டு வந்த வர் சாமுவேல் எவன்ஸ் ஸ்டோஜஸ் (Samuel Heavens Stoges) என்பவர் ஆவார். அதற்கு பிறகு அப்பகுதிகளில் ஆப்பிள் மரங்களை வளர்க்க ஆரம்பித்தனர், சாமுவேல் என்பவர் தன் கடைசிக் காலத்தில் இந்தியாவிலேயே தங்கிவிட்டதால் சத்யானந்தர் என்ற பெயரில் இந்து வானார், அவரது காலம் 1782-1846 என்பதாகும். இப் பொழுது ஆப்பிள் சாப்பிட உங்களது வாயில் தண்ணீர் ஊறுவதோடு, அறிவுபூர்வமான சிந்தனையிலும், மனம் ஈடுபடும் எனக் கருதுகிறேன்.

இச்செய்தியை கேள்விப்பட்டதும் அங்குள் ளோர் யாவரும் மிகவும் மகிழ்ச்சியுற்று ஒரு கூடை நிறைய ஆப்பிள் பழங்களோடு அவர்களது எல்லையற்ற அன்பு பழத்தையும் எங்களுக்கு அளித்து மேலும் எங்களது சக்தி பீட பயணத்தை மேற்கொள்ள எல்லா விதமான உதவிகளையும் அளித்தது எங்களது வாழ் நாளிலே என்றும் மறக்கமுடியாத ஒரு சம்பவம் ஆகும்.

மனாலியை காலை 9.30 மணியளவில் சேர்ந்த தும் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள தர்மசாலா என்னும் கட்டிடத்தில் தங்கினோம், அங்கு அடியேனுக்கு பாபா பாலகநாத் எனும் முருகனின் படம் ஞாபகத் துக்கு வரவே அங்கு தங்கியுள்ள ஒரு துறவியை கண்ட தும், இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராய் இருக்க வேண் டும் எனக் கருதி அவரிடம் பேச அணுகியபோது, துறவி வள்ளிமலை எனும் ஊரைச் சேர்ந்தவர் என்றும், தம் பெயர் சுப்பிரமணியன் என்றும், 40 வருடங்களுக்கு மேலாக இங்கேயே கழித்துவிட்டதாக் சொன்னதைக் கேட்டதும் என் மனக் கண் முன் வள்ளிமலையும் அடியேனது குருநாதரும் மின்னலைப்போல் தோன்றி மறைந்தனர்.

இறைவன் எந்தெந்த ரூபத்தில் அடியார்கள் பொருட்டு வந்து தோன்றாத் துணையாய் அருள் புரி கிறான் என்பதற்கு இந்த விஞ்ஞான உலகில் இதைவிட மெய்ஞானத்திற்கு விளக்கம் வேறு தேவையில்லை. அடியேனது வாழ்நாளில் இதுபோன்ற அதிசயங்கள் பலவிதத்தில் நிகழ்ந்த போதிலும், அதனை விரிக்கின் விஞ்ஞான உலகில் வாழும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமையாவிடில், சூடேறிய மணலில் நிறை கர்ப்பம் வாய்ந்த ஒரு தவளை எவ்வாறு வேதனைப்பட்டு தத்தித் தத்தி செல்லுமோ அதுபோன்று அடியேனின் மனம் துடிதுடிக்கும் என கருதியே, போற்றக்கூடிய ஒரு சில நிகழ்ச்சிகளையே கூற அவசியம் ஏற்பட்டதால் உங்கள் நினைவுக்கு கொண்டுவரச் செய்கிறேன்.

தமிழ் நாட்டில் எங்கோ ஒரு பகுதியில் இருந்து வந்த அடியேனுக்கு, இமயத்தில் அதிலும் வள்ளிமலையை சேர்ந்த சுப்பிரமணியம் என்னும் பெயருடைய துறவி யின் சந்திப்பு முன் பின் அறிவிப்பு இன்றி கிட்டியது என்றால் நாங்கள் முருகனிடமும் திருப்புகழிலும் கொண் டுள்ள நீங்காப் பற்றே இதற்கு மூலகாரணம் என்றே கருதவேண்டியுள்ளது. இது போன்ற நிகழ்ச்சிகள் என் தந்தையாரது வாழ்நாளில் நிகழ்ந்துள்ளதையும் அடிக் கடி என்னிடம் கூறக்கேட்டுள்ளேன்.

நாங்களும் அந்தத் துறவியும் சேர்ந்து காலை 9.45 மணி அளவில் இமாசல பிரதேச சொகுசு பேருந்தில் 51 கி.மீ. தூரமுள்ள இமயத்தின் உயரமான பகுதியிலுள்ள பனிச் சிகரத்திற்கு சென்றோம். இதன் உயரம் 13050 அடி ஆகும். எங்களால் அங்கு வீசுகின்ற பனிக்காற்றின் வேகத் தினாலும், தாங்கமுடியாத பனியின் குளிராலும் அவ் விடத்தில் நிற்க முடியாது மிகவும் நடுக்கமுற்றோம்.

முதுமையின் காரணமாக உடலில் வலிமை குன்றியபோதிலும் உள்ளத்தால் வலிமை குன் றாது சற்று மேலேயுள்ள வியாசர் குகையும் அவர் பெயரால் அங்கு உற்பத்தி ஆகும் வியாச நதியின் மூல குண்டம் போன்றவைகளையும் தரிசித்தோம். அதோடு இன்னும் வடக்கே Keylong வழியாக 60 கி.மீ. தூரத்தி லுள்ள உதயப்பூர் அருகே 4 கி.மீ. தூரம் சென்றால் திரி லோக நாதரை தரிசிக்கலாம் என்று அங்குள்ளவர்கள் கூறக்கேட்டோம். எங்களால் அங்கு சென்று தரிசனம் செய்ய முடியாது போனபோது அங்குள்ளவர்களால் திரிலோகநாதரின் படம் கிடைக்கப் பெற்றுப் பேருவகை அடைந்தோம்.

(அடுத்த இதழில்)

# வைகாசி மாத மகத்துவம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

ஒரு சமயம் அம்பரீஷ மகாராஜா, தேவரிஷியாகிய நாரதரைப் பார்த்து, ''மகா முனிவரே! மகா புண்ணிய ரூபமாகிய மார்கழி முதலான மாதங்களையும் விட்டுவிட்டு மற்ற புனித மாதங்களில் அனைத்திலுமே பிரதானமான தாக இந்த வைகாசி மாதத்தைக் கூறுவதன் காரணம் என்ன''? என்று கேட்டார்.

நாரத முனிவரும், ''அரசனே! உன்னுடைய நன்மைக்காகவும், இந்த உலகத்தவர் நன்மை பெறுவதற்காகவும், என் தந்தையான பிரம்மதேவரே அதைப்பற்றிக் கூறியபடியே கூறுகிறேன் கேட்பாயாக,'' என்று கூற ஆரம்பித்தார்.

''வித்தைகளில் வேதம்'', மந்திரங்களில் 'பிரணவம்' மரங்களில் 'கல்பவிருக்ஷம்', பசுக்களில் 'காமதேனு', தேவரில் 'விஷ்ணு', நதிகளில் கங்கை, இரத்தினங்களில் கௌஸ்துபம் போல், மாதங்களில் சிறந்தது 'வைசாகம்'.

பூலோகத்திலேயே மிகவும் புண்ணியமான இந்த பாரதநாட்டில் பிறப்பதென்பதே அரிது; மகாபுண்ணிய பலத்தால் அவ்வாறு பிறக்க நேரிட்டபோதிலும், வேறு பிராணிகளாகப் பிறக்காமல் மனிதராகப்பிறப்பது என்பது அதனினும் அரிது; அப்படியே பிறக்க நேரிட்டாலும், சாஸ்திர பூர்வமாக விதிக்கப்பட்ட கடமைகளை அறிந்து, அனுசரித்து நடப்பதென்பது அதனினும் அரிது; வைசாக மாத விரதத்தை அனுசரிப்பது என்பது அதனினும் அரிதாகும்.

மனிதப்பிறவியை அடைந்தவன் பகவானிடம் பக்தியுடையவனாக இருந்தபோதிலும், வைசாக மாதத்தில் ஸ்நானம், தானம், ஜபம் முதலியவற்றை விதிப்பூர்வமாக செய்து அனுசரிப்பவனே புண்ணியன் ஆவான். அவனே வாழ்க்கையில் சுகமடையத்தக்க உத்தமன் ஆவான்.

**வைகாசி விசாகம்**

வைகாசி விசாகம் என்பது முருகனுக்கு உகந்த திருநாள். இருபத்தேழு நட்சத்திரங்களில் விசாகத்தை திருமுருகனின் அவதார நட்சத்திரமாகக் கூறுவர். ஆறுமுகனின் பல பெயர்களில் இந்த நட்சத்திரத்தைச் சேர்த்து, 'விசாகவிஜயன்' என்ற திருப்பெயர் விளங்குகிறது.

'முருகன் என்ற சொல்லுக்கு 'அழகன்' என்று பொருள்; குமரன் என்ற சொல்லுக்கு உலக சம்பத்தை எல்லாம் அருள் புரிகின்றவன் என்பது பொருள் ஆகும்.

சரவணபவன்' சரவணத்திலே தோன்றியவன். 'விசாகன்' என்றால் சிறந்த மயிலை வாகனமாக உடையவன்.

சாகம் - சிறகு. விசாகம் - சிறந்த சிறகினையுடைய மயில்.

சிறந்த சிறகினையுடைய மயிலை வாகனமாக உடையவன் விசாகன்.

ஆறுமுகங்களாக இருக்கிறான் ஷண்முகன். அந்த ஆறுமுகம் ஆறுவகையான கருணை செய்கிறது.

ஒரு முகம் பிரணவ மயிலேறி விளையாடுகிறது.

ஒருமுகம் பரமனுக்கு சிவஞானம் போதிக்கிறது.

ஒரு முகம் முருகாவென உரைக்கும் அடியார்தம் வினை தீர்க்கிறது.

ஒரு முகம் அஞ்ஞானம் எனும் மலையைப் பிளக்கிறது.

ஒரு முகம் ஆணவமலமான சூரபத்மனை ஆட்கொள்கிறது.

ஒரு முகம் வள்ளியம்மைக்குக் கருணை புரிகிறது.

முருகனுக்கு மொத்தம் மூன்று வாகனங்கள். அவைகளாவன, ஆட்டுக்கடாவாகனம், யானை வாகனம், மயில் வாகனம் ஆகும்.

ஆணவமலம் - மயில், கன்மமலம் - யானை, மாயாமலம் - ஆடு.

ஆணவமலமான சூரபதுமனை ஆட்கொண்டதில், முருகனுக்கு மயில் வாகனமானான் சூரபதுமன்.

முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரில், வைகாசி விசாகத்திருவிழாவும், கந்தஷஷ்டிப் பெருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெறும். இந்த விழாக்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி பக்திப்பரவசத்தில் திளைப்பதைக் காணுவதே பேரின்பமாகும்.

முருகன் கோயில்களில் வைகாசி விசாகத்தன்று பால் காவடி எடுத்துப் பலவிதங்களில் தங்கள் பக்தியைப் பிரார்த்தனைகளுடன் செய்வார்கள்.

அன்று வயலூர் முருகனுக்கு பால் குடம் எடுப்பவர்களும் உண்டு.

அன்று முருகனுக்கு அபிஷேக ஆராதனைகளுடன், அலங்காரத்தையும் செய்து கொண்டாடுவார்கள். அவ்வரிய காட்சியைக் காணக்கண் கோடி போதாது.

வைசாக மஹாத்மியம் என்னும் நூல் வைசாக மாதத்தில் செய்யும் தானதர்மங்களின் பலன் அளவிட்டுக்கூற முடியாததாகும் என்று கூறுகிறது. தண்ணீர்ப்பந்தல் வைப்பதும், மாம்பழம், அன்னதானம் செய்வதும் மிகமிக விசேஷமானதாகப் புராணங்களில் கூறப்படுகிறது.

வைசாக மாதத்தில் மானிடருக்கு நன்மைப் புரியக்கருதி, பகவான் கட்டளையிட, தீர்த்ததேவதைகள் சூர்யோதம் முதல் ஆறு நாழிகை வரை நீரில் வசிக்கின்றனர். அச்சமயம் விதி வழுவாது நீராடுவோரது பாபத்தை அகற்றி, வேண்டிய வரமளிக்கின்றனர். நீராடாதவரை சபிக்கின்றனர்.

உலகைப் படைத்த பகவான் எல்லோருக்கும், எல்லா காரியங்களுக்கும் அனுகூலமாக வசந்த 'ருது' வைப்படைத்து, அக்காலத்திலே 'ரமா'தேவியுடன் சகல தேவகணங்களும் சூழ பாரினில் ஒவ்வோர் வீட்டிற்கும் வருகிறார். அச்சமயம் ஸ்நானம், தானம் செய்யாதவரது செல்வத்தை அபகரிக்கிறார். வைசாகத்தில் சுலபமான தீர்த்த தானத்தையேனும் செய்ய வேண்டும். இல்லையேல் உத்தம மானிட ஜன்மாவை இழந்து, மிருகம், பறவை, புழுக்களாகப் பிறப்பர்.

## வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

பேரன்புடையீர்!

வணக்கம்.

தவிர்க்க முடியாத காரணங்களால் ''திருக்கோயில்'' மார்ச், ஏப்பிரல் இதழ்களை அச்சிட்டு உங்களுக்கு வழங்க இயலவில்லை.

இனி, இறையருளால் தடங்கலின்றி இதழ்கள் புதுப்பொலிவுடன் வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்து உங்கள் அன்பை இன்றுபோல் என்றும் வேண்டுகின்றோம்.

''திருக்கோயில்'' நிர்வாகிகள்

வைசாகத்தில் செய்யும் சகலதானங்களும் திவ்யமான பலனை அளிக்கும். விசேஷமான, அவசியம் செய்தே தீர வேண்டிய சில தானங்களுள் தீர்த்ததானம் மிகச் சிறந்தது. தண்ணீர் பந்தல் வைப்போர், தனது குலத்துடன் பல்லாயிரமாண்டு வைகுண்டத்தில் வசிப்பர். நீர்தானம் செய்யாதவர் கழுத்தில் ஒரு துவாரம் இருப்பதால் குனிந்து தீர்த்தமருந்த முடியாமல் மழைத் துளிகளை எதிர்பார்த்து நிற்கும் சாதகப்பட்சியாகப் பிறப்பர்.

குடை, விசிறி, கும்பம் இவைகள் தானத்திற்கு மிகச்சிறந்தவை. விசிறி அளிக்காதவர் வாதரோகத்தால் பீடிக்கப்படுவர்; சகலதுக்கங்களையும் அகற்றவல்ல குடைதானம் செய்யாதவர் பேயாகப் பிறப்பர்; பாதுகை, அநாதைகள் நிழலில் நிற்க மண்டபம், அன்னம், படுக்கை பால், தலையணை, கம்பளம், துணி, குங்குமம், சந்தனம், கோரோசனை, மாம்பழம், தாம்பூலம் முதலிய தானங்கள் வைசாகத்தில் செய்யத்தக்கன. அன்ன தாதா, பிதா ஆவான்; படுக்கை தானம் நோயை அகற்றும்; தலையணை தானம் ஏழு பிறப்பில் செய்த பாபத்தை நீக்கும்; கம்பளம் அபமிருத்யுவை அகற்றும்; குங்குமம் புஷ்பங்கள் ராஜபதவியைத்தரும்; சந்தன தானம் எலும்பு சதைகளிலுள்ள பாபத்தைப் போக்கும்; நீர் மோர் செல்வத்தை அளிக்கும்; வெள்ளரிக்காய், கரும்பு, பானகம் இவைகள் கோரிய பலனைத்தரும். பானக தானத்தால் பித்ருக்கள் சந்தோஷமடைகின்றனர். நூறு 'கயா' சிரார்த்தத்திற்கு சமம் பானக தானமாகும்.

வைசாக சுத்த துவாதசி மிகப் புண்ணியமான காலம்; அச்சமயம் செய்யும் தான தருமங்கள் அக்ஷயமான பலனை அளிக்கும்.

இம்மாதத்தில் மாம்பழம், ததியன்னம் (தயிர் சாதம்) இவைகளை அளிப்பதும், சாதுக்களுக்கு விசிறுவதும் உத்தமம்.

வைசாகமாதத்தில் 'மாவு' தானம் செய்பவன், அந்தமாவின் ஒரு துகளுக்கு ஓர் ஆண்டு வீதம், சிவலோகத்தில் வசித்து அதன் பிறகு, பூலோகத்தில் பிறந்து சிவ பக்தனாகவும் அறிஞனாகவும் புத்திரபாக்கியவானாகவும் சீமானாகவும், பூமானாகவும் வாழ்வான்!

சூரியன் மேஷ ராசியில் பிரவேசிக்கும் காலம் வைசாக ஸ்நானம் செய்து, விரதமேற்பதாகும். சூரியன் மேஷராசியில் இருக்கும் காலம் முழுவதும் நாள்தோறும் அதிகாலையில் எழுந்து, நதி, குளம், நீர்நிலைகளில் நித்திய நியமங்களோடு நீராட வேண்டும். சூரிய உதயத்திற்கு முன் சென்று உதயமானவுடன் நீராட வேண்டும்.

விதிமுறைகள் அறிந்த அந்தணரைக் கொண்டு, விதிமுறைகளை அறிந்து, ஆரம்பம் செய்வதே நல்லது. முதலில் சங்கல்பம் செய்துகொண்டு பகவான் 'ஹரி'யைத் தியானம் செய்து கொண்டே பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

'மது' முதலான அரக்கர்களைக் கொன்ற பகவானின் கிருபையாலும், தேவர்கள் அந்தணர்கள் அனுக்கிரகத்தாலும் இந்த வைசாகத்தில் யாதொரு தடையுமில்லாமல் நாள்தோறும் நீராடி, புண்ணிய பலம் பெற வாய்ப்பு உண்டாக வேண்டும் என்றும், வைசாக ஸ்நான பலன் தனக்குப் பூர்ணமாகக் கிடைக்க வேண்டும் என்றும், பகவான் நாராயணனை தியானம் செய்தபடி மௌனமாக நீராட வேண்டும்.

தலை முழுகும்போது, 'ஓம் நமோ நாராயணாய' என்ற மூலமந்திரத்தை உச்சரித்தபடி முழுக வேண்டும். கையில் தர்ப்பை அணிந்து, ஆசமனம் செய்து, பூமியில் விழுந்து வணங்க வேண்டும். பிறகு தன்னைச் சுற்றிலும் நான்குமுழ நீள அகலமுள்ள பிரதேசத்தைக் கற்பித்துக் கொண்டு, அவ்விடத்தில் கங்கா தேவியை எழுந்தருளச் செய்ய வேண்டும். ''ஏ! பாகீரதி! பகவான் விஷ்ணுவின் பாதகமலங்களிலிருந்து உதித்த வைஷ்ணவியும் இங்கு தேவதையாக விளங்குகின்றாய்; நீயே இங்கு இப்போது பிரசன்னமாக இருந்து கங்கா தீர்த்த ஸ்நான பலனை இவ்விடத்தில் எனக்கு அளிப்பாயாக'', என்று பிரார்த்தித்துக் கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும். பிறகு விதிப்படி ஆசமனம் செய்துகொண்டு, சுத்தமானதும் வெண்ணிறம் உடையதுமான ஆடையை அணிந்து கொண்டு, மூவுலகங்களின் திருப்திக்காகவும், முதலில் பிரம்மாவுக்காகவும், பிறகு விஷ்ணுவுக்காகவும், பிறகு ருத்திர மூர்த்திக்காகவும் தர்ப்பணம் செய்ய வேண்டும். பிறகு, மறுபடியும் ஆசமனம் செய்துகொண்டு, தனக்கு அருகில் ஒரு தாமரையைக் கற்பித்துக் கொண்டு, அட்சதை, புஷ்பம், சந்தனம் முதலானவற்றோடு அதற்கு அர்க்யம் சமர்ப்பிக்க வேண்டும். பிறகு சூரிய பகவானைக் குறித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

'சூரிய பகவானே! விஷ்ணு சொரூபமானவரே! தங்களுக்கு நமஸ்காரம்; பிரம்ம சொரூபம் தரிப்பவரே தங்களுக்கு நமஸ்காரம்; ஆயிரம் கிரணங்களுடையவரும், முழுமையான ஒளிமயமானவருமான தங்களுக்கு நமஸ்காரம், ருத்ர ரூபமானவரே! பக்தர்களைக் காப்பவரே! தங்களுக்கு நமஸ்காரம்; ஏ! பகவானே! இந்த பூலோகத்தில் மனிதர்கள் செய்கின்ற புண்ணிய பாவங்கள் எல்லாவற்றையும் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; தங்களுக்குத் தெரியாமல் எந்த காரியமும் நடைபெற முடியாது. ஏ! பாஸ்கரா! என்னிடம் கருணையைக் காட்டு! ஏ! திவாகரா! தங்களை வணங்குகிறேன்'', என்று சூரிய பகவானை துதி செய்து அவரைச் சுற்றி வலம் வந்து வணங்க வேண்டும்.

வைசாக மாதத்தில் புனித தீர்த்தங்களில் நீராடி நாராயணனை ஆராதிப்பவர்கள் தங்கள் விரதத்தை ஜப நியமங்களோடு, உத்தம அந்தணர்களுக்கு உகந்த தட்சணைகள் கொடுத்து, 'கோ' தானம் முதலான தானங்கள் செய்வது நல்லது.

விரதத்திற்கு பங்கமேற்படாதவகையில், ஒரு வேளை மட்டும் உண்டு, வெறுந்தரையில் படுத்துறங்க வேண்டும். பகல் தூக்கம், அகால போஜனம் கூடாது. பிரம்மச்சரிய விரதத்தைப் பூரணமாகக் கடைபிடிக்க வேண்டும்.

வைசாக விரதத்தை அம்மாத முழுவதுமாக அனுஷ்டிக்க இயலாதவர்கள் அமிர்தம் தோன்றிய அம்மாத ஏகாதசி, அதை பகவான் காத்ததினமான துவாதசி, அமரர் அமிர்தம் உண்ட திரயோதசி, பௌர்ணமி ஆகிய திதிகளிலேனும் ஸ்நான, தான, பகவத் ஆராதனை, பகவத் கதாச்ரவணங்களைச் செய்ய வேண்டும்.

பகவானை பலவிதமான உபசாரங்களோடு பூஜை செய்வதே மனிதப்பிறவி எடுத்ததன் உண்மையான பலன் ஆகும். அப்படிச்செய்யாதவர்கள் எவ்வளவு சொத்து சுகம் பெற்றிருந்தபோதிலும் இல்லாதவரே; மனிதப் பிறவி அடைந்தும் அடையாதவரே!

பகவானுக்கு லஷ்மி எப்படிப்பிரியமானவளோ அதேபோல் இந்த வைசாகமாதமும் பிரியமானதே. அதனால் இம்மாதத்தில் செய்யப்படும் தானதருமங்கள் மிகச்சிறந்த பலனை அளிப்பதாகும்.

வைசாக ஸ்நானம்செய்து, விரதம் அனுசரிப்பவர்களைத் தீண்டுவதற்கு எமதர்மனும் அஞ்சுவான்.

இம்மாதம் முழுவதும் இவ்வாறு புலனடக்கத்தோடு பகவானைத்துதிப்பவர், சகலபாபங்களில் இருந்தும் விமோசனம் பெற்று உத்தமகதி அடைவார்கள்.

சுலபமாக வெய்யில்காலத்தில் சரீரத்திற்கு அனுகூலமான வைசாகஸ்நானத்தைச்செய்து, இகபரசுகம் பெறுவதன் பெருமை சிவனால் கூறப்பட்டதாகும்'', என்று நாரதர் கூறிமுடித்தார்.

அம்பரீஷன் இவ்வுத்தமகதைகூறிய தேவரிஷியை தேவோபசாரம் செய்து அனுப்பினான்.

இவ்வுத்தமமான வைசாக விரதமகிமை, பத்ம புராணத்திலும், வைசாக மஹாத்மியம் என்றநூலிலும் சிறப்பாகவும், விரிவாகவும் கூறப்பட்டுள்ளது.

# அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவில்

- பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியம், M.A., M.Phill, B.Ed.,

**இருப்பிடம்:**

கொங்கு நாட்டில் உள்ள சக்தித்தலங்களில் ஒன்றாக நீதிதெய்வமாக விளங்கும் திருத்தலம் அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவிலாகும். இத்திருக்கோவில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி வட்டத்தில், பொள்ளாச்சியிலிருந்து 14.கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. ஆனைமலை நகரின் மத்தியில் அமைந்துள்ளது.

**ஊர்ப்பெயர்:**

பழங்காலத்தில் கொங்குநாடு 24 சிறுபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கொங்கு நாட்டில் உள்ள தென்பகுதியான ஆனைமலை அடிவாரத்தில் அமையப்பெற்றஊருக்கு அதேபெயர் ஏற்பட்டது. ஆனைமலையில் ஆழியாற்றின்கரையில் அருள்மிகு சோமேஸ்வரர் திருக்கோவிலும், ஊரின் நடுவில் அருள்மிகு காசிவிசுவநாதர் கோயிலும் உள்ளன. ஆழியாற்றின் கிளைநதியான உப்பாற்றங்கரையில் அமைந்துள்ளது அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்.

**கோவில் தோன்றிய வரலாறு :**

உம்பற் காடான ஆனைமலைப்பகுதியை ஓர் அரசன் ஆண்டுவந்தான். இவன் ஆழியாற்றங்கரையில் இருந்த தன் அரசுத்தோட்டத்தில் ஒரு மாமரத்தை வளர்த்துவந்தான். அம்மரத்தின் கிளைகளையோ, காய்களையோ, கனிகளையோ, யாரும் பயன்படுத்தக்கூடாது என்றும் ஆணையிட்டிருந்தான்.

ஒருநாள் ஆழியாற்றில் தன்ஒத்த வயதுப்பெண்களோடு நீராடவந்த இளம்பெண் ஒருத்தி, அந்த மாமரத்திலிருந்து தானாக உதிர்ந்துவந்த மாங்கனியை எடுத்து உண்டாள். இதுதெரிந்த மன்னன் அவளைக் கொல்லுமாறு கட்டளையிட்டான். அப்பெண்ணின் தந்தை மகளின் எடையளவு தங்கத்தால் செய்த பாவை ஒன்றையும், எண்பத்தேழு ஆண் யானைகளையும் அந்தப்பெண் அறியாது செய்த தவறுக்காக அபராதம் கட்டுவதாகக் கூறியும், அரசன் அதை ஏற்காது அப்பெண்ணைக் கொலை செய்துவிட்டான்.

கொலைசெய்யப்பட்ட அந்தப்பெண்ணை மயானத்தில், சமாதிப்படுத்தி, அதன்மீது அந்தப் பெண் போன்ற உருவத்தை மயான மண்ணில் அமைத்து வழிபட்டார்கள். மயானத்தில் சயனித்தநிலையில் இருந்த அந்தப்பெண் நாளடைவில் 'மாசாணி'' என்று அழைக்கப்பட்டாள். பெண்கொலை புரிந்த அந்த மன்னனை கொங்குஅரசர்கள் படையெடுத்துத் தண்டித்து, அவனது காவல் மரமான மாமரத்தையும் வெட்டிவிட்டனர் என்பது பின்னர் நடந்த வரலாறு. பெயர் தெரியாத இந்த ஆனைமலைப்பெண் பின்னர் கொங்குநாடு முழுவதும் வழிபடும் தெய்வம் ஆனாள். பக்தர்கள் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இங்குவந்து இந்த தேவதையை வழிபடலாயினர்.

**ஆலய அமைப்பு:**

ஆனைமலை நகரில் உப்பாற்றங்கரையில் ஆலயம் முக்கால் ஏக்கர் பரப்பளவில் அழகாக அமைந்துள்ளது. பிரதான வாயில் மேற்குமுகமாக அமைந்துள்ளது. ஆலயத்தின் வடபுறம் உப்பாற்றங்கரைக்குச் செல்வதற்கு ஒருவழி உள்ளது. உள்பிரகாரத்தில் விநாயகர் கிழக்குநோக்கி எழுந்தருளியுள்ளார். விநாயகரை அடுத்து பேச்சியம்மன் வடக்குநோக்கு எழுந்தருளியுள்ளாள். சமீபகாலத்தில் முருகன்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தின் பிரகாரத்திலேயே நிர்வாக அலுவலகம் செயல்படுகிது. அம்பாள் 17அடி நீளத்தில் சயனித்தநிலையில் காட்சியளிக்கிறாள். இதுவேறு எந்தக் கோயிலிலும் காணமுடியாத அதிசயம் ஆகும்.

**மாகாளியம்மன் மகிமை:**

சாதிமத பேதமின்றி, இந்துக்கள், இஸ்லாம், கிருஸ்துவம் முதலிய எல்லா மதத்தவர்களும் இங்கே வந்து வணங்கிநிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

பில்லி, சூனியம், மந்திரம், ஏவல் போன்ற பெரும்பகைகளால் பாதிக்கப்பட்டவர்கள் வாரந்தோறும் தவறாதுவந்து தரிசித்துப் பரிகாரம் பெறுகின்றனர். பிறரால் வஞ்சிக்கப்பட்டவர்களும், கள்வர்களால் பாதிக்கப்பட்டவர்களும், தங்களுக்கு நீதிகிடைக்கவேண்டும் என்றும், இழந்த பொருள் மீண்டும் கிடைக்கவேண்டும் என்றும் வேண்டி மிளகாய் அரைத்து இங்கே உள்ள **'நீதிக் கல்லில்'** பூசிவிடுகிறார்கள். தங்கள் முறையீட்டில் நீதி இருந்தால் தவறுசெய்தோர் தண்டிக்கப்படுகிறார்கள் என்றும் நம்புகிறார்கள்.

இக்கோயிலின் மற்றொரு சிறப்பம்சம் இங்கு பிரசாதமாக வழங்கப்படும் கறுப்புக்கயிறு; காசிக்கயிறு



போல அம்மனின் பாதத்தில்வைத்து வழிபட்டு, வழங்கப் படுகிறது. அக்கயிற்றைக் கையில் கட்டிக்கொண்டால் எவ்வித தீங்கும் வராது. துன்பங்கள் அகலும்.

மேலும் குழந்தைப்பேறுவேண்டி சிலவாரங்கள் அம்மையின் முன்புவந்து நோன்புநோற்று வழிபட்டு, பின்பு அதுநிறைவேறியவுடன் தாயும் சேயுமாகவந்து வேண்டுதலை நிறைவேற்றிச் செல்லும் தாய்மார்கள் ஏராளம்.

**பூஜைகள் விழாக்கள்:**

இத்திருக்கோவிலில் தினந்தோறும் மூன்றுகாலப் பூஜைகள் அதாவது காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை என்று முறையாக நடைபெறுகிறது. பக்தர்களுக்காக இவ் வாலயம் காலை ஆறுமணிமுதல் மாலை எட்டுமணி வரை திறந்திருக்கும்.

இத்திருக்கோவிலில் ஆண்டுதோறும் குண்டம் திருவிழா தைமாதம் பதினேழுநாட்கள் சிறப்பாக நடைபெறும்.

**நிர்வாகம்:**

இத்திருக்கோவில் தமிழக இந்துசமய அற நிலைய ஆட்சித் துறையினரால் நிர்வகிக்கப்பெறுகிறது. முதல்நிலை நிர்வாகஅதிகாரி ஒருவர் அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்று சிறப்பாக நிர்வகித்து வருகிறார்.

**நீதிதேவதை:**

தவறு செய்தவர்களைத் தண்டிப்பவள், பொருளை இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவதை, அருள்மிகு மாசாணியம்மன் என்பது அப்பகுதி மக்களின் அசையாத நம்பிக்கை.

தங்கள் குறைகளை முறையீட்டுச்சீட்டில் எழுதி அம்மன் சந்நிதி முன்புஉள்ள திரிசூலத்தில் கட்டினால் நினைத்தகாரியம் நிறைவேறும் என்பது அப்பகுதி மக்களின் மற்றொரு நம்பிக்கையாகும். இம்முறையீட் டுச்சீட்டில் கட்டுவதற்கு ஆலயத்தில் கட்டணம் செலுத்தி ரசீது பெறவேண்டும்.


மேலும் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாயின் போது உதிரப்பெருக்கு அதிகம் ஏற்பட்டு வயிற்றுவலி போன்ற தொந்தரவுகள் இருக்குமானால் 'உதிரமாலைச் சீட்டு'' கோவில் அலுவலகத்தில் வாங்கினால், ஒரு பச்சிலை உருண்டை கொடுக்கிறார்கள். அதைச் சாப்பிட் டால் அந்த உபத்திரவம் நீங்கிப் பெண்கள் நலம் பெறுவர் என்பது கண்கண்ட உண்மை.

இத்திருக்கோவில் அம்மனுக்கு அபிஷேகம் செய்த எண்ணெயை வாங்கிக்கொண்டு சென்று கைகால் குடைச்சல், வாதஉளைச்சல் உள்ளவர்கள் தடவி, நோய் நீங்கி சுகம்பெற்று நன்மை அடைகிறார்கள்.

★★★

# எட்டாத விருப்பங்கள் ஈடேற வேண்டும்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



சொல்லாமல் சொல்கின்ற சொல்லும் வேண்டும்
சுவைக்காமல் சுரக்கின்ற சொல்நயம் வேண்டும்,
இல்லாமல் இருக்கின்ற இயல்பும் வேண்டும்,
இல்லாத ஞானநிலை இனிக்க வேண்டும்,
கொள்ளாமல் கொள்ளும் குணமும் வேண்டும்,
குறையாமல் அருட் செல்வம் கூட வேண்டும்,
துள்ளாமல் துள்ளும் மனமும் வேண்டும்,
துடிக்காமல் துடிக்கும் தொடர்பும் வேண்டும், ........1

எண்ணாமல் கவிதைகள் இயற்ற வேண்டும்,
எழுதாமல் எண்ணங்கள் எழுத்தாக வேண்டும்,
உண்ணாமல் உடலுயிரும், ஒன்றாக வேண்டும்,
உள்மனக் கண்ணோடு உறவாட வேண்டும்,
பண்ணாமல் பக்தியும், முக்திதர வேண்டும்,
பாடாமல் பாசுரமும் பக்திதரவேண்டும்,
காணாமல் கண்களும், காட்சிகாண வேண்டும்,
கணிக்காமல் எதிர்காலம் கண்முன்வர வேண்டும், ........2

பிறக்காமல் மறுபிறவி, பேரின்பம் வேண்டும்,
பிரியாமல் அன்புள்ளம் பேணும்நிலை வேண்டும்,
மறக்காமல் பிறர்குற்றம் மறக்கும்நிலை வேண்டும்,
மௌனத்தில் ஆத்மாவின் மனம்பேச வேண்டும்,
இறக்காமல் உடலுயிரும் இல்லாநிலை வேண்டும்,
ஏதுமிலா ஜீவன்முக்தி எய்தும்நிலை வேண்டும்,
துறக்காமல் இன்பதுன்பம் தொடாதநிலை வேண்டும்,
துஞ்சாமல் சமாதிநிலை துய்க்க வேண்டுமே. .......3

# சுவாமி முதலியாண்டான்


- கோமதி ராகவன், FCA

ஸ்ரீ ராமனுஜரின் சகோதரி கோதம்பிகா என்பவர். இவர் காஞ்சிபுரத்திற்கருகேயுள்ள புருஷமங்கலம் என்ற தலத்தில் வாழ்ந்து வந்த அனந்த நாரயண தீட்சிதர் என்ற வைணவ பண்டிதரை மணந்திருந்தார். தீட்சிதரும் கோதாம்பிகாவும் சத்புத்ர பாக்கியம் வேண்டி திருவேங் கட யாத்திரை மேற்கொண்டனர். புருஷமங்கலத்தி லிருந்து திருவேங்கடம் செல்லும் வழியில் திருநின்றவூர் ஏரிகாத்த ராமபிரான் சன்னதியில் சென்று சேவித்தனர். (மதுராந்தகம் போன்று இங்கும் ஏரிகாத்த ராமர் உண்டு) அன்றிரவு ஸ்ரீராமபிரான் தீட்சிதர் கனவில் எழுந்தருளி தமதுஅம்சமாக அவர்களுக்கு புத்திரன் பிறப்பான் என்று கடாட்சித்தார். அவ்வருள்வாக்கின்படியே அவர்களுக்கு குரோதன வருடம் (கி.பி.1025) சித்திரைமாதம் புனர் பூசம் திருநட்சத்திரத்தில் அதாவது ஸ்ரீராமர் திருநட்சத்திரத் தன்று சுவாமி முதலியாண்டான் திருக்குமாரராய் அவதரித்தார். அவரது தந்தையார் அவருக்கு 'தாசரதி'' என்ற திருநாமம் சூட்டினார். சுவாமி முதலியாண்டான் அவதரித்த தலம் பச்சைவாரணப் பெருமாள்கோயில் எனப்படுகிறது. பெருமாள் கோயிலில் சுவாமி முதலி யாண்டானுக்குத் தனி சன்னதியுள்ளது. ஆயின் அவதார தலங்களில் எம்பார், கூரத்தாழ்வார் போன்ற ஆசார்யர் களுக்கு உள்ளதுபோல் இங்குத் தனிக்கோயில் இல்லை.

சுவாமி முதலியாண்டான் தந்தையிடம் திவ்யப் பிரபந்தகளைக் கற்றார். வடமொழி வேதங்களிலும் மற்றும் சாஸ்திரங்களிலும் விசேஷ புலமை பெற்றார். ஸ்ரீராமானுஜர் துறவறம் ஏற்றதும் சுவாமி முதலியாண் டான் அவரிடம் ஆச்ரயித்து சிஷ்யரானார். ஸ்ரீராமானுஜர் அவர்க்கு பஞ்ச சமஸ்காரங்களை அருளி பாஷ்யம் மற்றும் வேதரஹஸ்யார்த்தங்களை அறிவித்தார். வைணவர்கள் சுவாமி முதலியாண்டானை 'யதிராஜ பாதுகா'' எனப் போற்றுவர். ஸ்ரீராமானுசரோ சுவாமி முதலியாண்டவ னைத் தமது திரிதண்டமாகக் கருதினார். இவ்வகையில் சுவாமி முதலியாண்டான் ஸ்ரீராமானுஜருக்குப் 'பாகிநேய ராகவும்'' அதாவது மருமகனாகவும், பாதுகையாகவும், திரிதண்டமாகவும் விளங்கினார்.

ஸ்ரீராமானுசர் திருக்கோட்டியூர் நம்பியிடம் கீதா சரமச்லோகரஹஸ்யார்த்தங்களைக் கற்க விழைந்தார். இதற்காகப் பதினெட்டுமுறை திருவரங்கத்தினின்று திருக் கோட்டியூர் சென்று ஒவ்வொரு முறையும் ஒரு விசிஷ் டாத்வைத ரஹஸ்யார்த்தத்தை உபதேசம் பெற்றார். பதி னெட்டு ரஹஸ்யார்த்தங்களைப் பெற்றதும் நம்பியின் நியமனப்படி ஒருமாதகால உபவாசம் இருந்து கடும் பரீட்சைக்குட்பட்ட பிறகே திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணர் கோயிலில் நம்பியிடமிருந்து பகவத்கீதையின் சரம ஸ்லோகத்தின் உட்பொருளை அருளப்பெற்றார். கூரத்தாழ்வார் ஒருமாதகால உபவாசம் இருந்து உடைய வரிடமிருந்து இவ்வர்த்தங்களைப் பெற்றார். சுவாமி முதலியாண்டானும் உபதேசம் வேண்ட, உடையவர் அவர் தமது மருமகனாதலால் திருக்கோட்டியூர் நம்பி யிடமிருந்தே விளக்கத்தைப் பெறுமாறு கூறினார். சுவாமி முதலியாண்டானும் ஆறுமாதங்கள் நம்பியின் திருவடிகளிலே கைங்கர்யம் செய்தார். இதன்பிறகு நம்பி முதலியாண்டானிடம் முக்குறும்புகள் அவரிடம் இல் லையெனில் உடையவரே உபதேசிப்பார் எனக்கூறி விட்டார். முதலியாண்டானும் திருவரங்கம் திரும்பினார். முக்குறும்புகளாவன பிறப்பாலும் செல்வத்தாலும் நற் குடிப்பிறப்பு, கல்வி மற்றும் சிறந்த குணம் இவற்றால் வரும் அகந்தைகள். சுவாமி முதலியாண்டான் மேன்மை யான கந்தாடை வாதூல குலத்தவர், சிறந்த கல்விமான் மற்றும் சாத்வீக வைணவச் சான்றோர். திருக்கோட்டி யூர் நம்பியிடம் முதலியாண்டான் சிறப்பாகப் பணியாற்றி யது பற்றி ஸ்ரீராமானுசர் அகமகிழ்ந்தாராயினும் அவர் முக்குறும்புகளையும் வென்றவர்தான் என உலகிற்கு நிலைநாட்டும் தருணத்தையும் கனிந்து வரச்செய்தார்.

பெரிய நம்பிகளின் பெண் திருமணமாகிப் புக்ககம் சென்றிருந்தார். ஒருமுறை அவள் தண்ணீர் கொண்டுவர மாமியாரை உடன் வருமாறு அழைத்தார். மாமியார் வர இயலாது என்றும், வேண்டும்என்றால் அவள் தனது பிறந்தகத்திலிருந்து வேலைக்கு ஒரு பெண்ணை அழைத்து வரட்டும் என்றும் இகழ்ந்து பேசி னாள். இது பொறுக்கவொட்டாதவளாய் அவளும் பெரிய நம்பிகளிடம் முறையிட்டாள். நம்பிகளோ அவள் தனது அண்ணனாகிய ஸ்ரீராமானுசரிடமே சென்று கூறவேண் டும் எனச்சொன்னார். அதன்படி அவளும் உடையவ ரிடம் கூற, ஆசார்யர் சுவாமி முதலியாண்டானைக் காட்டி அவரைக்கூட அழைத்துப் போகும்படி கூறினார். சுவாமி முதலியாண்டானும் எவ்வித அகங்காரமுமின்றி பணி விடை புரிந்தார். ஸ்ரீவைணவர்கள் அகங்காரத்தைத் தோஷ மாகக் கொள்கின்றனர். அகங்காரம் ஸ்வரூபத்தை மறைத்து விடும். ஆகையால் சான்றோனுடைய சம்பந்தம் ஆகை யால் சான்றோனுடைய சம்பந்தம் உண்டாவதற்கு இத் தோஷம் அகலவேண்டும் (ஸ்ரீவசன பூஷணம் 180, 181, 219, 220). இவ்வளவில் பெரிய நம்பிகளின் சம்பந்திகளும்



வந்திருப்பவர் முதலியாண்டானென பிறகு அறிந்து தமது தவற்றையுணர்ந்தவர்களாய் உடையவரிடம் தெண்டன் சமர்ப்பித்து மன்னித்தருளுமாறு வேண்டினர். இச்சம்பவத்தால் சுவாமி முதலியாண்டானின் ஆசார்ய நிஷ்டையும் சீரிய குணமும் வெளிப்பட்டன.

'குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று (குறள். 982)

சான்றோர் நலமாவது இயல்பாக அமைந்த குணங்களாகிய அகநலமே. பிறநலம் என்பவை குடிப்பிறப்பு, செல்வம் முதலியன. இவை பொது வகைப்பட்டதால் நூலோர் பிறநலங்களையும் 'குணம்'' என்று கொள்ளார். (பரிமேழலகர் உரை)

ஸ்ரீராமானுஜரும் முக்குறும்புகளையும் வென்றவர் என நிலைநாட்டிய முதலியாண்டானுக்கு ஸ்ரீமத் பகவத்கீதை சுலோக உட்பொருளை விளக்கினார்.

ஸ்ரீராமானுசர் ஆளவந்தார் ஆஞ்ஞைப்படி பிரம்ம சூத்திரத்திற்கு பாஷ்யம் அருளிய பிறகு திக்விஜய யாத்திரை மேற்கொண்டார். தாமஸ நெறிகளான மாயா வாதம், சமணம் போன்றவற்றைக் கடைப்பிடிப்பவர்களுடன் தர்க்கம் செய்து ஸத்வ மதமான விசிஷ்டாத்வைதத்தின் மெய்மையை உணர்த்தினார். ஸ்ரீராமானுசர் ஸ்ரீவைஷ்ணவ தர்சன நிர்வாகத்திற்கு கூரத்தாழ்வாரையும், கோயில் நிர்வாகத்திற்கு முதலியாண்டானையும் நியமித்திருந்தார். உடையவரின் திக்விஜய யாத்திரையின் போது திருவரங்கனுக்கு உகப்பான கைங்கர்யம் செய்ததுடன் திருவரங்கனின் திரண்ட செல்வத்தையும் செவ்வனே நிர்வாகம் செய்து முதலியாண்டான் உடையவரின் பேரன்பிற்கு உகந்தவரானார்.

சுவாமி முதலியாண்டான் 'ரகசியத்ரயம்'' என்னும் நூலை வடமொழியில் அருளிச் செய்தார். பொய்கையாழ்வார் திருவாய்மலர்ந்த 'முதல்திருஅந்தாதி'' என்னும் திவ்யப்பிரபந்தப் பாசுரங்களுக்கு வாழ்த்துப் பாடலாகிய தனியன்களைத் தமிழில் அருளிச் செய்திருக்கிறார். ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் அர்ச்சா அவதாரத்தைப் போற்றுபவை. சுவாமி முதலியாண்டானோ அர்ச்சா அவதாரத்தில் பெரும் ஈடுபாடு உடையவர். அருளிச் செயல்களுக்கு முதலியாண்டான் இயற்றிய வியாக்யானங்கள் பக்திச்சுவை மிகுந்தவை. திருவாய்மொழியில் 'நெஞ்சினால் நினைப்பான் அவன் அவனாகும் நீள் கடல் வண்ணனே'' என்ற பாசுரத்திற்கு முதலியாண்டான் அர்ச்சா அவதாரத்தைப் பெருமாளின் அம்சமாகக் கொள்ளாமல் பூர்ணாவதாரமாக எண்ணுபவனே ஸ்ரீவைஷ்ணவன் என்கிறார்.

கிருமி கண்ட சோழன் ஆட்சிசெய்தபோது ஸ்ரீராமானுஜர் முதலியாண்டானைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு திருவரங்கத்தினின்று கர்நாடகம் சென்றார். சாளக்கிராமம் என்ற ஊரில் சமணர்கள் வாழ்ந்து வந்தனர். உடையவரின் ஆஞ்ஞைப்படி முதலியாண்டான் அவ்வூரின் ஊருணியில் தமது திருப்பாதங்களை நனைத்து விட்டுவந்தார். சுவாமியின் ஸ்ரீபாத தீர்த்தத்தை உட்கொண்ட சமணர்கள் ஸ்ரீவைணவர்கள் ஆனார்கள். இவ்வூரில் தற்போது நரசிம்மப்பெருமாள் கோயில் உள்ளது. சுவாமி முதலியாண்டானின் ஸ்ரீபாத தீர்த்த ஊருணியும் காணப்படுகிறது.

இதன்பிறகு உடையவரும் சுவாமி முதலியாண்டானும் தொண்டனூர் சென்றனர். அவ்வூரை ஆண்டுவந்த ஹொய்சள மன்னன் பண்டைய யது

குலத்தில் தோன்றியவன் (புறம் 201). இவ்வரசகுலம் இடைக்காலத்தில் இந்துமதத்தின் ஒரு கிளையான சமணத்தைக் கடைப்பிடித்தது. உடையவர் அவனது நோயுற்றிருந்த இளவரசியைக் குணப்படுத்தவே அவனும் உடையவரது பாதாரவிந்தங்களில் தெண்டன் சமர்ப்பித்து விஷ்ணு வர்த்தன ஹொய்சளன் என்ற பெயருடன் ஸ்ரீவைஷ்ணவனானான். இதையறிந்த சமணர்கள் இவன் சினம் கொண்டு உடையவரைத் தர்க்கத்திற்கு அழைத்தனர். உடையவரும் விசிஷ்டாத்வைத மேன்மையை நிலைநாட்டி அவர்களைத் தடுத்தாட் கொண்டார்.

சுவாமி முதலியாண்டான் தொண்டனூரில் ஸ்ரீமந்நாராயணருக்குக் கோயில் நிர்மாணித்தார். இங்கு உடையவர் சமணர்களை வென்ற இடத்தில் ஐயஸ்தம்பமும் உள்ளது. இக்கோயிலில் உள்ள பெருமாள் திருநாமம் 'ஸ்ரீநம்பி நாராயணர்'' என்பது. தொண்டனூரில் சுவாமி முதலியாண்டான் ஸ்ரீராமானுசர் திருவடிகளிலே 'தாடீ பஞ்சகம்'' என்ற வடமொழி கிரந்தத்தை இயற்றினார்.

யதுகிரியில் உள்ள மேலக்கோட்டையில் ஸ்ரீராமானுசர் 'திரு நாராயணர்'' கோயிலை நிர்மாணித்தார். 'ஒரு நாயகமாய்'' எனத் தொடங்கும் திருவாய்மொழிப் பாசுரங்களைப் பெருமாளுக்குச் சமர்ப்பித்தார். முதன்முறையாகத் தமிழ்வேதங்களை கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் பாராயணம் செய்வித்தவர் ஸ்ரீராமானுஜப் பெருந்தகையே என்னலாம். ஆசார்யருக்கு இணையாகத் தமிழ் முழக்கம் செய்தோர் இப்புவியின் கண் இல்லை.

திருநாராயணபுரத்தில் ஸ்ரீராமானுசர் பன்னிரண்டு வருஷங்கள் கைங்கர்யம் செய்தார். இவ்வளவில் ஆசார்யரின் நியமனத்தைச் சிரமேற்கொண்டு சுவாமி முதலியாண்டானும் பேலூர்சென்று தாமஸ கொள்கையினரை வென்று கிருதயுக தர்மமாகிய வைணவத்தை ஏற்கச் செய்தார். இங்கு 'கேசவ நாராயணர்'' கோயிலை நிர்மாணித்தார். அதேபோல் தழைக்காட்டில் 'கீர்த்தி நாராயணர்'' விஜயபுரத்தில் 'விஜய நாராயணர்'' மற்றும் யதுகுலத்தில் 'வீர நாராயணர்'' கோயில்களைக் கட்டுவித்தார்.

கவிச் சக்கரவர்த்தி கம்பர் ராமர் இலக்குவர் வருகையால் பாலைவனம் குளிர்ந்தது எனப்பொருள்பட 'வெளிறு நீங்கிய பாலையை'' என்பார். (அயோத்தியா காண்டம்). அவர்கள் அவதாரங்களாகிய உடையவர், முதலியாண்டான் வருகையால் கர்நாடகமும் வேதத்திற்குப் புறம்பான கருத்துக்கள் நீங்கப்பெற்று வர்ணாசரம வேற்றுமையும் பகைமையும் களையப்பெற்று புனிதமானது. முன்பு ஸ்ரீமத் நாதமுனிகளிடம் உடையவரின் பவிஷ்ய தாசார்ய விக்ரஹத்தைக் கொடுத்த நம்மாழ்வாரும், உடையவர் அவதாரத்தால் 'கலியும் கெடும் கண்டு கொள்மின்'' என்றார் என்பதை நினைவு கூரலாம்.

கிருமி கண்டனுக்குப் பிறகு குலோத்துங்க சோழன்காலத்தில் ஸ்ரீராமானுஜரும் திருவரங்கம் திரும்பினார். குலோத்துங்கசோழனும் உடையவரை ஆச்ரயித்து ஸ்ரீரங்கம்கோயில் அதிகாரத்தை ஆசார்யரிடம் ஒப்படைத்தான். முன்புபோல் முதலியாண்டானும் திருவரங்கப் பணிகளைத் தொடர்ந்தார்.

சுவாமி கந்தாடையாண்டான் என்பவர் முதலியாண்டானின் ஒரே திருக்குமாரர். இவர் ஸ்ரீபெரும்புதூரில் ஸ்ரீராமானுசரின் 'தான் உகந்த'' திருமேனியையும் திருவரங்கத்தில் 'தானான'' திருமேனியையும் எழுந்தருளச் செய்தார். இவரது திருக்குமாரர் கந்தாடை தோழப்பர் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் ஆண்டாள் விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து திருக்கல்யாண உற்சவம் நடத்தினார். தோழப்பரின் மூன்றாவது திருக்குமாரரான ராமானுஜாச்சாரியரின் வழிவந்தவரான ஸ்ரீரங்கநாத நாயன்பிள்ளை லோகாசார்யருடன் திருவரங்கனை இஸ்லாமிய படையெடுப்பிலிருந்து காப்பாற்றுகையில் அன்னியர்களால் தாக்கப்பட்டார். கந்தாடை வாதூல முதலியாண்டான் வம்சத்தில் தோன்றிய குமாரவேங்கடாசாரியர் சென்னையருகேயுள்ள சிங்கப்பெருமாள்கோயில் என்ற ஊரை ஏற்படுத்தி, கோயிலைக் கட்டுவித்தார். கோயில்கந்தாடை வாதூல அப்பன், அண்ணன், முதலியாண்டான் திருமாளிகை ஆசார்யர்கள் தற்போது வைணவத்தொண்டு புரிந்து வருகின்றனர். கோயில் கந்தாடை வாதூல அண்ணன் ஸ்ரீமணவாளமாமுனிகள் நியமித்த அஷ்ட திக்கஜர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

ஸ்ரீமணவாள மாமுனிகளும் கந்தாடை வாதூல திருவம்சத்தினர் செய்த மகத்தான தொண்டினைப்போற்றி இவர்கட்கு எம்பெருமானார் கருணை, ஞானம், பணிவு, செல்வம், சீலம் இவையனைத்தும் நல்கும் என வாழ்த்தியுள்ளார்.

★★★

## தீயவர்க்கு உடல் முழுதும் விடம்

ஈக்குத்தலையிலும், தேளுக்குக் கொடுக்கிலும், பாம்புக்குப் பல்லிலும் விடம் இருக்கும். ஆயின் ''துர்ச்சனருக்கு அங்கம் முழுதும் விடமே ஆம்'' என்கிறது நீதிவெண்பா நூல்.

# என்னை உனக்கே தந்தேன் முருகா!

- திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.



அன்பு எனும் சொல் உன்னால் அழகு பெற்றது
அழகு எனும் சொல் உன்னால் பொலிவடைந்தது
அறிவு எனும் சொல் உன்னால் ஒளி பெற்றது
ஆண்மை எனும் சொல் உன்னால் வலிமை பெற்றது
ஆற்றல் எனும் சொல் உன்னால் ஏற்றம் பெற்றது
இனிமை எனும் சொல் உன்னால் உதயமானது
ஈதல் எனும் சொல் உன்னால் உன்னதமானது
உறவு எனும் சொல் உன்னால் விரிவானது
ஊக்கம் எனும் சொல் உன்னால் உயர்வு பெற்றது
எழுச்சி எனும் சொல் உன்னால் வளர்ச்சி பெற்றது
ஏற்றம் எனும் சொல் உன்னால் போற்றப் பெற்றது
ஐக்கியம் எனும் சொல் உன்னால் பக்குவமானது
ஒருமை எனும் சொல் உன்னால் பெருமை பெற்றது
ஓராறு எனும் சொல் உன் அறுமுகத்தைக் காட்டியது
ஔவைப் பாட்டிக்கு உன்னால் அகன்ற அறிவு
கிட்டியது.

முருகா! முத்துக்குமாரா! முத்தமிழ்த் தலைவா!

என் செவிகள் உன் திருப்புகழை எப்போதும்
கேட்டு ஞானத்தேனில் ஊற வேண்டும்.

என் விழிகள் உன்னைக் கண்டு களித்து
கண்ணீர் ஊற்றாய் ஆக வேண்டும்.

என் வாய் உனை எங்ஙனமும் புகழ்ந்து பேசி
மெய் மணந்து இருக்க வேண்டும்.

என் நெற்றி சக்தித் திருமகனின்
திருநீறு அணிந்து சிறக்க வேண்டும்.

என் இதயம் துடிக்கும் போதெல்லாம்
முருகா என்று சொல்லியே துடிக்க வேண்டும்

என்நா சுவைத்து, உணவை நான் உண்ணும் போது
என் நாயகன் வேலனை நினைந்தே உண்ண
வேண்டும்.

என் கரங்கள், கந்தனைத் தொழுத பின்னர் தான்
மற்ற பணியைப் புரிய வேண்டும்.

என் கால்கள் கடம்பனிருக் குமிடம் சென்ற
பின்னர் தான் மற்ற இடத்திற்குச் செல்ல வேண்டும்

என் உயிர் உமை மைந்தன் கதிர் வேலனை
நினைந்து உருகி உருகிப் பின் பிரிய வேண்டும்.

திங்கள் கீற்றைப் புனைந்தவன் மகனே
எங்கும் நிறைந்து என்னைக் காப்பாய்

பொங்கும் மங்கலம் எங்கும் தருவாய்
பொங்கும் அழகே பைந்தமிழ் முருகா!

சொக்கத் தங்கமே சொக்கனின் மகனே - என்
சிக்கல் சிங்கார வேலா! முருகா! உன்
சொக்க வெள்ளி பாற்குட முகத்துடன் - நின்
செக்கச் சிவந்த மலரடி அருள்வாய் - குகனே.

# வினாவும் விளக்கமும்

– பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A,D.Litt, Ph.D.

(முன் தொடர்ச்சி)

**வினா 10: சிவபுராணத்தில் 'கோகழி ஆண்ட குருமணி'' என்று வருகிறது. இதிலுள்ள 'கோகழி' என்ற சொல்லின் பொருள் என்ன?**

**விளக்கம்:** திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயிலுக்கு, 'கோகழி' என்ற மற்றொருபெயரும் உண்டு.

திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவடிவில்வந்து மணிவாசகருக்கு உபதேசித்து அருளினான்.

'கோகழி' என்ற சொல்லில் சைவ சித்தாந்தத்தின் உயிர்நாடியே உள்ளது எனலாம். அவ்வளவு ஆழமான பொருள் பதிந்த சொல்லாகும்.

'பதி-பசு-பாசம்' என்ற மூன்றினுள் சைவத்தின் மையப் பொருள் அடங்கும்.

'பசு' என்பது உயிர்களையும், 'பதி' என்பது உயிர்களின் தலைவனான இறைவனையும் குறிக்கும். பசுக்களுக்கு உரிய மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பன 'பாசம்' எனப்படும். அது பதிக்குக் கிடையாது.

பசுவை 'ஜீவாத்மா' எனவும், பதியைப் 'பரமாத்மா' எனவும் வேறுவிதமாகக் கூறுவதுண்டு.

'பசுவை' 'ஆ' என்ற, ஓரெழுத்தினால் குறிப்பிடுவர். வடமொழியில் பசுவை 'கோ' என்பர். 'கோதானம்' என்று குறிப்பிடுகிறோம் அல்லவா?

எனவே, 'கோ'க்களைத் தனது உடைமையாகப் பெற்ற அம்பிகையை 'கோமதி' என்றும் 'ஆவுடைய நாயகி' என்றும் அழைப்பர்.

ஈசனை ஆவுடையார், ஆவுடையப்பன் போன்ற பெயர்களால் அழைப்பர்.

பசுக்களாகிய உயிர்களைப் பரிபாலனம் செய்வதால் திருமாலை, 'கோபாலன்' எனப் பெயரிட்டழைத்தனர்.

உயிர்களிடத்தில் இயல்பாக அமைந்துள்ள குற்றங்களாகிய மும்மலங்களை நீக்கி அவற்றின் பசுத்தன்மையை கழியச்செய்கிறான் இறைவன். அல்லது பாசம் என்ற பசுத்தன்மையை நீக்குகிறான்.

'கோ' (பசு) வின் இயல்பு கழியும் திருத்தலமாகிய திருப்பெருந்துறையை, 'கோகழி' என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிட்டார் மாணிக்கவாசகர்.

'திருவாடுதுறை' என்ற பெயரும் அதே பொருளில் அமைந்ததுதான். ஆ+ஆடு+தண்துறை அதாவது, உயிர்களின் 'ஆ'த்தன்மையை அழிக்கும் திருத்தலம் எனப் பொருள்படும்.

மேலும் சற்றுத் தெளிவாகக் கூறினால், மனிதர்களின் குறைபாடுகளைக் களைந்து அவர்களைத் தெய்வ நிலைக்கு உயர்த்தும் திருத்தலங்கள் கோகழியும், ஆவடுதண்துறையும் ஆகும்.

**வினா 11: திருமணங்களில் இடம்பெறும் 'காசியாத்திரை' மற்றும் 'அரசாணிக்கால்' என்ற சடங்குகளின் உட்பொருள் என்ன?**

**விளக்கம்:** குருகுலக் கல்விமுறை இருந்தகாலத்தில் மாணவர்கள் ஆசிரியர்களின் இல்லத்திலேயே (ஆசிரமத்திலேயே) தங்கி, கல்விபயின்றனர். வேறுஉலகியல் செய்திகளில் கவனம் செலுத்தாது முழுஈடுபாடும் கல்வியிலேயே ஒருமுகப்படுத்தப்படும். கல்வியை முடித்து வெளியேறி, இல்வாழ்க்கையைத் தொடங்குமுன் உலகியல் அனுபவம் வேண்டாமா?

எனவே, திருமணத்துக்கு முன்னால் உலகஅனுபவம் பெற காசியாத்திரை மேற்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. காசிமாநகர் உலகப்புகழ்பெற்ற ஒரு நகரம். யுவாங்சுவாங் போன்ற சீனயாத்திரிகர் முதல் பலநாட்டினரும், பலமொழிபேசும் இனத்தவரும் அங்கு வந்துசென்றனர் என்பது வரலாறுகூறும் உண்மை. பல மாதங்கள் பயணம்செய்து பலமாநிலங்களைக்கடந்து சென்று காசியை அடையவேண்டும். அதனால் தானாகவே உலகியல் அனுபவம் ஏற்பட்டுவிடும்.

ஆங்கிலேயர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியவுடன் 'Continental Tour' என்ற பயணம் மேற்கொள்வர்.

அதேவகையில் அமைந்ததுதான் காசியாத்திரை கல்வியை முடித்து, திருமணவாழ்வு தொடங்குமுன், உலகியல் அறிவுபெற மேற்கொண்ட அக்கால உண்மைப் பயணம் தற்காலத்தில் சடங்காக மட்டும் உள்ளது.

காடு செழித்தால் நாடு செழிக்கும் என்பதால் அக்கால அரசன் வனவளம் பேணுவதில் கவனம் செலுத்தினர்.

நாட்டில் மரச்செல்வம் குறையாது இருக்க அரசர்கள் குடிமக்களுக்கு ஆணை பிறப்பித்து மரங்களை வளர்க்கச் செய்தனர். திருமணம் செய்துகொள்ளும் ஒவ்

வொரு தம்பதியரும் ஒரு மரமேனும் வளர்க்கவேண்டு மென அரசாணை வலியுறுத்தியிருந்தது.

அரசனின் ஆணைப்படி, திருமணநாளில் தம்பதியர் ஒரு மரக்கிளையை அல்லது கன்றை நட்டு வளர்க்கத் தொடங்கினர். அதன் வழியே இல்லறக் கடமைகளுடன் சமுதாயக்கடமையும் உணர்த்தப்பட்டது.

மன்னன் ஆணைப்படி மரம் வளர்க்கத்தொடங்கும் வைபவமே அரசன்+ஆணை+கால் நடுதல் ஆகும். தற்காலத்தில் சடங்காக மட்டும் நிகழும் இந்நிகழ்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்து, திருமணத்தம்பதியர் பயன்மரம் வளர்க்கத்தொடங்கினால் பருவமழை பொழியும் அன்றோ?

**வினா 12: தனி சூரிய வழிபாடு ஏன் அவ்வளவு பிரபலமாக நடைபெறவில்லை?**

**விளக்கம்:** 'பலர் புகழ் ஞாயிறு'' என்று நக்கீரரும், ஞாயிறு போற்றுதும்'' என்று இளங்கோவடிகளும் ஆதவன் பெருமையை உரைத்தனர்.

எனினும், தனிசூரியவழிபாடு பிரபலமாக நடைபெறவில்லை. இரதசப்தமி, தைப்பொங்கல், சூரிய கிரகணம் போன்ற நாட்களில் சூரியனை வழிபடுகின்றனர். வெகுசிலர் மட்டும் 'சூரியநமஸ்காரம்' என்ற ஞாயிறு வணக்கத்தை மேற்கொள்ளுகின்றனர். வெற்றியை வேண்டுவோர் 'ஆதித்யஹ்ருதயம்' என்ற தோத்திரத்தை, தாம் விரும்பிய வெற்றிகிட்டும்வரை பாராயணம் செய்கின்றனர்.

கணபதி, சக்தி, சிவன், முருகன், திருமால் ஆகிய ஐந்து கடவுளரையும் முழுமுதற் பொருளாகக்கொண்டு வழிபடுவோர் ஏராளம். கணபதிவழிபாடு மகாராட்டிரத்திலும், சக்திவழிபாடு வங்கத்திலும் சிறப்பாக நடைபெறுகிறது.

தமிழ்நாட்டின் சைவம், வைணவம் என்ற இரு பெருஞ் சமயங்களே உண்டு. கணபதிவழிபாடும், சக்திவழிபாடும், முருகவழிபாடும் இங்குச் சைவத்திற்குள் அடங்கிவிட்டது.

கணபதி அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியும், அம்பிகை அருள்பெற்ற அபிராமிபட்டரும், முருகன் அருள்பெற்ற அருணகிரிநாதரும் சைவர்களே.

குண்டலினி, கோணங்கள் முதலிய சாக்த செய்திகளை பத்தாந்திருமுறையாகிய திருமந்திரத்தில் காண்கிறோம்.

விநாயகர் திருவிரட்டை மணிமாலை போன்ற நூல்களும், திருமுருகாற்றுப்படையும் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. திருவேற்காடு போன்ற சக்தித்தலங்களிலும், பழநி முதலான முருகன் தலங்களிலும் திருநீறு (விபூதி) பிரசாதமே வழங்கப்படுகிறது.

காணாபத்யம், சாக்தம், கௌமாரம் என்ற மூன்று சமயங்களையும் தன்னுள் அடக்கிய சைவநெறியில் சூரியனை இறைவனின் ஒருகண்ணாகக் கருதுகின்றனர். முச்சுடர்களில், ஈசனின் வலக்கண் சூரியன். இடக்கண் சந்திரன். நெற்றிக்கண் அக்கினி. சிவகுடும்பத்தைச் சேர்ந்த கணபதி, அம்பிகை, முருகன் ஆகியோருக்கும் நெற்றிக் கண் உண்டு. சிவனைப்போலவே அவர்களுக்கும் வலக் கண்ணாக விளங்குபவன் சூரியன்.

ஆதலால், சூரியனை, சிவாலயங்களில் பரிவார தேவதையாக வெளிச்சுற்றில் வைத்தே வழிபடுகின்றனர்.

சூரியனார்கோயில் என்ற தலமும் தனிச்சூரியன் திருக்கோயில் அன்று. ஒன்பதுகோள்களுக்கும் உரிய கோயிலே ஆகும். நவக்கிரக க்ஷேத்திரம் என்பர்.

இங்கும், முதலில் 'கோள் தீர்த்த விநாயகர்' என்ற தலவிநாயகரையும், விசாலாட்சி உடனுறை விசுவநாதரையும் வழிப்பட்டபின்பே சூரியனையும் பிறகோள்களையும் வழிபடவேண்டுமென்பது திருக்கோயில் தரிசனமுறையாகும்.

மேலும், சூரியன் சிவபெருமானை வழிபட்டு அருளும், ஆற்றலும் பெற்ற பல வரலாறுகள் உள்ளன. ஞாயிறு, திருபருதிநியமம், பருத்தியூர் பேன்ற தலங்களில் ஆதவன் ஈசனை வழிபட்டுள்ளான்.

வைணவநெறியில் திருமாலை சூரியனின் அம்சமாகவே கருதி 'சூரியநாராயணர்' என்று குறிப்பிடுகின்றனர்.

அக்காலத்தில் கண்ணால் காண்பதை மட்டுமே உண்மை என்று ஏற்றுக்கொள்ளும் 'பிரத்யட்சப்பிரமாணவாதிகள்' என்ற வகையினர் இருந்தனர். அத்தகையோர் கண்ணால் கதிரவனை அவனது ஆற்றல்கருதி ஏற்று வழிபடலாம் என்று கருதிய நோக்கத்தில்தான் 'சௌரம்' என்றும் தனிசூரியவழிபாட்டுமுறை ஏற்பட்டிருக்க வேண்டும்.

கடவுள் நம்பிக்கையற்ற பிரத்யட்சப்பிரமாண வாதிகள் எக்காலத்திலும் மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே இருந்திருக்கின்றனர். ஒரிசா மாநிலத்திலுள்ள கோனார்க் தவிர எங்கும் சூரியனுக்குத் தனிக்கோயில் இல்லை.

சூரியபுராணம், ஆதித்யஹிருதயம் போன்ற மிகச் சிலநூல்களே சூரியனைப்பற்றி இயற்றப்பட்டுள்ளன.

தமிழில் சங்க இலக்கியங்களிலோ, பக்திநூல்களிலோ சூரியனுக்கென தனிநூல் இயற்றப்படவில்லை. வடலூர் வள்ளலாரின் சமகாலத்தவரான வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் சூரியனுக்கென்று பெரியதனி நூலை இயற்றியுள்ளார். ஆறுசமயக் கடவுளருக்கும் தனித்தனியே ஆயிரம் பாடல்கள் சூட்டியருளினார் தண்டபாணி சுவாமிகள். சமயங்கடந்துநிற்கும் பரம்பொருளுக்கும் அவர் ஆயிரம் பாடல்கள் சூட்டினார்.

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் இயற்றிய அந்நூல்தான் 'ஞாயிறு ஆயிரம்!'

# வருமுன் காப்போம்

- ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.



பயணம் செல்ல முன்பதிவு செய்கின்றேன்
பயனுள்ள பொருட்களையே எடுத்துச் செல்கின்றேன்
குறைந்த சுமை போதுமென நினைக்கிறேன்
நிறைந்த சுகம் கிடைக்குமென எண்ணுகிறேன்.


உணவுத் தேவைக்கு உண்ணாமல் உழைக்கின்றேன்
உடுக்கும் உடைக்கும் ஓடியாடி அலைகின்றேன்
இருக்க இடத்திற்கு எங்கெல்லாமோ தேடுகிறேன்
இன்றும் தேவைக்கு எத்தனையோ செய்கிறேன்.


பாழும் உலகில் வாழவே நினைக்கின்றேன்
ஏழு தலைமுறைக்கு சேர்த்து வைக்கின்றேன்
குறுக்கு வழியில் முன்னேற முயல்கிறேன்
குறிக்கோள் வேறில்லாமல் குற்றத்தோடு வாழ்கின்றேன்.

எங்கும் உள்ளவன் என்னிடம் இல்லாதவன்
தங்க இடமிருந்தும் தங்காது சென்றவன்
மங்கிய ஆர்வத்தினால் மாயமாய் மறைந்தவன்
பொங்கும் ஆசை வந்ததாலே வந்திட்டான்.

உடல் நோய்க்கு மருந்து கேட்கின்றேன்
உயிர் நோய் இருப்பதை மறக்கின்றேன்
இருள் விலகநேரம் பார்த்திருப்பேன்
அருள் பெறவே வருமுன் காத்திடுவேன்.















திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் 13-4-2000 அன்று தமிழ்ப் புத்தாண்டு 1008 பால்குட விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலில் இணை ஆணையாளரும் செயல் அலுவலருமான திருமிகு மு.க. பாலசுப்பிரமணியன் பி.ஏ.பி.எல். அவர்களும், அறங்காவலர் குழுவினரும் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்திருந்தனர்.

பதிவு எண். T.N/CHIEF PMG/515/2000/WPP 283



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் பிரம்மோற்சவத் திருத்தேர் வடம் பிடித்தல் வைபவம் 25–4–2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும் நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப். அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத் துறையின் சென்னை இணை ஆணையாளர் திரு ஜி. இராஜநாயகம் பி.ஏ.பி.எல். அவர்களும் திருக்கோயில் செயல் அலுவலர் திரு ஆ. குப்புசாமி பி.ஏ.பி.எல். அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.